விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 199 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 22 ஞாயிற்றுக்கிழமை (06.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# பயங்கரவாதத் தடைச் சட்டம்
## செப்ரெம்பர் முதல் வாரம் நீக்கப்படும்
### வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்




(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டம் செப்ரெம்பர் முதல் வாரம் நீக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செப்ரெம்பர் முதல் வாரமளவில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும். அது தொடர்பில் வர்த்தமானியை 23ஆம் பக்கம் பார்க்க

### செய்மதிப் படம் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட
# புதிய பகுதியில்
# மண்டையோடு
### நேற்றைய அகழ்வில் அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் செய்மதிப் படம் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட புதிய பகுதியில் மண்டையோடு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவிலில் மாணவி சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கில் பாடசாலை மாணவி ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவி ஒருவரே விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

மாணவியின் சடலம் மீட் 23ஆம் பக்கம் பார்க்க

### வடக்கில் 1,756 பட்டதாரிகளுக்கு
## இந்த ஆண்டுக்குள் ஆசிரியர் நியமனம்

(வவுனியா)

வட மாகாணத்தில் இந்த ஆண்டுக்குள் 1,756 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது. அவர்கள் அனைவரும் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி 23ஆம் பக்கம் பார்க்க

## மேலும் 3 எலும்புக்கூடுகள் நேற்றைய அகழ்வில் அடையாளம்
### இதுவரை 45 மனித எச்சங்கள் இனங்காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் 3 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு இதுவரை 45 மனித எச்சங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் 23ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழிக்கு நீதி வழங்கக் கோரி
### மேலூரில் நாம் தமிழர் கட்சி ஆர்ப்பாட்டம்

(மதுரை)

இலங்கை செம்மணியில் புதைக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்கக் கோரி மேலூரில் நாம் தமிழர் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மதுரை மாவட்டம் மேலூர் பேருந்து நிலையத்திற்கு 23ஆம் பக்கம் பார்க்க

- அரசியல் கட்டுரைகள்
- ஆலடி மாநாடு
- வியாசர் பதில்கள்
- கவிதைக் கலசம்



இன்னும் பல அம்சங்களுடன்
சங்குநாதம் உள்ளே...

### செம்மணிப் புதைகுழியில்
## ஆயுதத்தை ஒத்த பொருள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் ஆயுதத்தை ஒத்த பொருள் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சட்டத்தரணி வி.எஸ். 23ஆம் பக்கம் பார்க்க

### சாரதிக்குத் திடீர் சுகவீனம்
## சாதுரியமாக செயற்பட்டதால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன
### சாவகச்சேரியில் நெகிழ்ச்சிச் சம்பவம்


(சாவகச்சேரி)

இ.போ.ச பேருந்தைச் செலுத்திய சாரதிக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டதையடுத்து சாதுரியமாக செயற்பட்டதால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்ட நெகிழ்ச்சிச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரிப் பகுதியில் 23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1965 - 06 - 21 | 2025 - 07 - 05 |

## கணபதிப்பிள்ளை சிற்சபேசன்
### (சேகர்–அண்ணாவியார்)

காளி கோவிலடி நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிற்சபேசன் அவர்கள் நேற்று 05.07.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாதனையூர் கணபதிப்பிள்ளை அண்ணாவியார்-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுழிபுரம் சிற்றம்பலம்-இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் பிரேமரஞ்சனி அவர்களின் அன்புக்கணவரும் தர்மிளா, சிவதர்சன் (பிரான்ஸ்),சிவதர்சினி,பவித்திரா(LB-நெல்லியடி),தனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் தில்லைநாயகி, சிற்சமூர்த்தி(ஜேர்மனி), சிவகெங்கை (ஜேர்மனி), கனகசபேசன், தில்லைராசா (பிரான்ஸ்), பிரகாஸ்(கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் பத்மசிலன் (கௌரி சிற்பாலயம் மாதனை), விசாகேசன் (கௌரியம்பாள் சிற்பாலயம் யாழ்), சுஜீவன் ஆகியோரின் அன்பு மாமனும் லோகேந்திரராசா, ரேவதி, அருணகிரி, உமாவதி,குமுதினி, ஜெகதீஸ்வரி, பிரேமலீலா (நோர்வே), பிரேமதாஸ்(லண்டன்),பிரேமலதா(ஜேர்மனி), பிரேமகீதா, பிரேமதீபா, பிரேமகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அஸ்வின்,அஸ்மிதா, ஷத்திரா, ராம்சரன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளிகோவிலடி,<br>நெல்லியடி. (C-3340)

மகன் - 0033758917370<br>சகோதரன் - 00491775035879

தகவல் : குடும்பத்தினர்<br>077 4741933

# 31ம் நாள் நினைவஞ்சலி

06.07.2025



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 . 06 . 1962 | 05 . 06 . 2025 |

நல்லூரைப் பிறப்பிடமாகவும் சேச் வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி

## அமரர் சுசீலா கேதீஸ்வரன்

அவர்கள் 05.06.2025 அன்று சிவபதமடைந்தார்.
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.07.2025 வெள்ளிக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 06.07.2025 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(4692)

"மஞ்சுளா"<br>சேச் லேன், உடுவில்.

இங்ஙனம்:<br>குடும்பத்தினர்

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை



| தோற்றம் | இறைபதம் |
|---|---|
| 09.09.1935 | 03.07.2025 |

## பிரம்ம ஸ்ரீ சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வதிவிடமாகவும் குப்பிளான் கற்கரை விநாயகர் ஆலயம் மற்றும் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலய முன்னாள் பிரதம குருக்களுமாகிய பிரம்ம ஸ்ரீ சிவசாமி ஐயர் குமாரராஜக் குருக்கள்(கணபதி துரந்தரர், சிவாகம திலகம் சைவசித்தாந்த இரத்தினம்) அவர்கள் எமது திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த/ திருமுறை நேர்முகப் பயிற்சி மையம் இணுவிலின் போசகராகவும் விரிவுரையாளராகவும் தொண்டாற்றி தேவையான நிதி உதவிகளைத் தானாக மன முவர்ந்து அளித்தும், பயிலுனர்களை ஊக்கிவித்தும் வந்தார்.

எமது குருவாகிய ஐயா அவர்கள் இறைபதம் எய்தியமையையிட்டு பயிலுனர் ஆகிய நாம் அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**விரிவுரையாளர்களும் பயிலுநர்களும்**

**திருவாடுவதுறை ஆதீன சைவ சித்தாந்த/ திருமுறை நேர்முகப் பயிற்சி மையம், இணுவில்.**

(4729)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை விட்டுக்கொடுக்க முடியாது

## அரசாங்கம் உறுதி

**(கொழும்பு)**

**கச்சதீவை விட்டுக்கொடுக்கும் எண்ணம் இலங்கைக்கு இல்லை என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டு ஊடகம் ஒன்றிடம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில், இந்தியாவில் ஏற்படும் முரண்பாடுகள் அங்குள்ள அரசியல் கட்சிகளுக்கு இடையிலான பிரச்சினை என்று அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இராஜதந்திர வழிகள் திறந்தே உள்ளன.

எனினும், இலங்கை ஒருபோதும் கச்சதீவை விட்டுக்கொடுக்க ஒப்புக் கொள்ளாது என்பது உறுதி என்றும் குறிப்பிட்டுள்ள அவர், இது சர்வதேச சட்டத்தால் நிறுவப்பட்டது என்றும் தெரிவித்தார். (நி)

# தரம் 1 இற்கு மாணவர்களை

## இணைப்பது தொடர்பான அறிவித்தல்

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் முதலாம் வகுப்பிற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் மற்றும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் அனைத்தும் தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் மூலம் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்க முடியும்.

2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை அதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# தமிழ்-சிங்கள மொழிப் பிரச்சினையை தீர்க்கவுள்ள AI

(கொழும்பு)

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையேயான இடைவெளியை குறைக்க, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் மொழிபெயர்ப்பு மென்பொருள் ஒன்றை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் அறிவிப்பின்படி, மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து பல கல்வி மற்றும் தனியார் நிறுவனங்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளன.

இதன் மூலம், பேசும் சிங்களம் சில நொடிகளில் தமிழாகவும், தமிழில் பேசுவது சிங்களமாகவும் தானாக மொழிபெயர்க்கும் வசதியை இந்த மென்பொருள் வழங்கும்.

அடுத்த 6 மாதங்களில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு விடப்படும் எனவும், இது மொழி தடையை சமாளிக்க முக்கியமாக பயன்படும் எனவும் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார். (நி)

# அஸ்வெசும தொடர்பில் மேன்முறையீடு செய்யலாம்

(கொழும்பு)

அஸ்வெசும தொடர்பான மேன்முறையீடுகளை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை முன்வைக்க முடியுமென கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் அஸ்வெசும திட்டத்தின் மூலம் 1.8 மில்லியன் மக்கள் பயனடைந்துள்ளதாக கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர், கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை பெற்றுக்கொள்வதற்காக மேலும் 900,000 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் அண்மையில் தெரிவித்தார். (நி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை,வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

No.139, Main Street Jaffna.

யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்

(முன்பதிவு செய்து வரவும்) (4678)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127



www.EQMarriageService.com

CALL 076 664 9401

ஒன்லைன் திருமணசேவை Ensured Quality Lanka (Pvt) Ltd Bambalapity, Colombo 04

| மணமகன் தேவை | மணமகள் தேவை |
|---|---|
| 1994, இந்து, அனுசம் பட்டதாரி **AUDITOR, LONDON** சொந்த இடம்: காரைநகர் மணமகள் பதிவு இல:11714 | 2002, இந்து, ஆயிலியம் பட்டதாரி **AUDITOR, U.K** சொந்த இடம்: மயிலிட்டி மணமகன் பதிவு இல:11789 |
| 1995, இந்து, ஹஸ்தம் பட்டதாரி **TEACHER, CANADA** சொந்த இடம்: கொக்குவில் மணமகள் பதிவு இல:11744 | 1992, இந்து, திருவோணம் பட்டதாரி **ENGINEER, CANADA** சொந்த இடம்: அனலைதீவு மணமகன் பதிவு இல:11757 |
| 1995, இந்து, பூரம் பட்டதாரி **NURSE** சொந்த இடம்: பருத்தித்துறை மணமகள் பதிவு இல:11798 | 1994, இந்து, பரணி பட்டதாரி **ACCOUNTANT** சொந்த இடம்: யாழ்ப்பாணம் மணமகன் பதிவு இல:11837 |
| 1999, இந்து, திருவாதிரை முதுமானி பட்டதாரி **OPTOMETRIST, AUSTRALIA** சொந்த இடம்: யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல:11476 | 1993, இந்து, புனர்பூசம் பட்டதாரி **ENGINEER, AUSTRALIA** சொந்த இடம்: அல்வாய் மணமகன் பதிவு இல:11807 |
| 1997, இந்து, கேட்டை பட்டதாரி **ENGINEER** சொந்த இடம்: கோப்பாய் மணமகள் பதிவு இல:11763 | 1996, இந்து, பூராடம் முதுமானி பட்டதாரி **SOFTWARE ENGINEER** சொந்த இடம்: கிளிநொச்சி மணமகன் பதிவு இல:11820 |

**CALL 076 664 9401**


# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## துறவு வாழ்க்கைக்கு முன்வர விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்

ஈழத்தின் சைவ சமயத்திற்கான உயர் பீடமாய் விளங்கிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமுதல்வர் அண்மையில் பரிபூரணம் அடைந்ததமை அனைவரும் அறிந்ததே.

தற்போது ஆதீனத்திற்கான பணிகளை இயற்ற குருமுதல்வரோ, தம்பிரான் சுவாமிகளோ இல்லாதிருப்பதால், ஆதீனத்தின் சமயப் பணிகள் தடைப்பட்டு நிற்கின்றன.

ஆதீனப் பணிகளை முன்னின்று நடத்துவதற்காக, தூய துறவு வாழ்க்கை மேற்கொள்ள விரும்பி நிற்கும் நால்வர் எம்மால் தேர்தெடுக்கப்படவுள்ளனர்.

தனி வாழ்வொழுக்கம், இறைநம்பிக்கை, சைவத்தின் மீதானபற்றுதல், சைவ அறிவு, முற்றும் துறந்து இயங்கும் மனப்பான்மை கொண்ட எவரும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்போரில் நால்வர், அறிஞர் குழுவால் தேர்வு செய்யப்படுவர்.

துறவுவாழ்க்கைக்காய் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு இந்திய ஆதீனங்களில் பயிற்சி அளிக்கப்படும். அதில் தகுதி அடிப்படையில் ஒருவர் குருமுதல்வராகவும், மற்றைய மூவரும், தம்பிரான் சுவாமிகளாகவும் பணியாற்ற நியமிக்கப்படுவார்கள்

தேர்ந்தெடுக்கப்படும் துறவியருக்கான, தங்குமிட வசதி, உணவு, உடை முதலிய அனைத்துத் தேவைகளும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (4725)

**செயலாளர்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**
**இல 211/17, கோவில் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல 021 222 1075**

# மணிவிழா வாழ்த்து



திருமதி.எலிசபெத் வோல்டர் இருதயராஜன்
(S.L.T.S -I பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்)

Best Wishes

சேவைக்காலம்
(01.09.1992 - 06.07.2025)

- கிளி/ அக்கராயன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
- யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
- யா/சென்மேரிஸ் வித்தியாலயம்
- யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

மாணவர்களின் கல்விக் கண்திறந்திட அயராது உழைத்த ஆசிரியரின் அளப்பரிய சேவையை உளமார வாழ்த்துகின்றோம்.

(4718)

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம், யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

# இராசிபலன்

06.07.2025
ஆனி 22, ஞாயிற்றுக்கிழமை
விசாகம் முற்பகல் 11.53 மணிவரை

ஏகாதசி முற்பகல் 9.58 மணிவரை
சுபநேரம் 8.58-10.28 மணிவரை
இராகுகாலம் 4.28-5.58 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி,அச்சுவினி.

வளவன்

**மேஷம்** கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் கூடும், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.

**கடகம்** பிரபலமானவர்களின் சந்திப்பால், பெருமையடைவீர்கள், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**துலாம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வங்கியில் வைப்பு நிதியை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**ரிஷபம்** நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** நண்பர்கள் உங்களின் முயற்சிக்கும் பக்க பலமாக இருப்பர், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** வியாபார விருத்தியுண்டு, கனவுப்பலிதமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்

**கன்னி** எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பயணங்களால் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும்.

அன்புத் தீயால் அனைத்துத் தீயையும் அணைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழி அகழ்வை திசை திருப்ப முனையும் பேரினவாதச் சக்திகள்





தமிழர்களைத் தொடர்ந்தும் கொத்தடிமைகளாக வைத்திருக்க சிங்கள பெரும்பான்மையாளர்கள் விரும்புகின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை இலங்கை சிங்கள – பௌத்த நாடு. மற்றையவர்கள் அனைவரும் வந்தேறுகுடிகள்.

சிறுபான்மையினருக்கு இந்த நாடு குண்டுமணியளவேனும் சொந்தமில்லை. காலம் காலமாக பேரினவாதச் சக்திகளின் பாதங்களுக்குள் மிதிபட வேண்டுமே தவிர, அவர்களுக்கு உரிமைகளை வழங்கவோ, அவர்களும் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதை ஏற்றுக் கொள்ளவோ முடியாத குறுகிய மனப்பான்மையுடனேயே இருக்கின்றனர்.

இலங்கைத் திருநாட்டில் ஏன் இனப்போர் தோற்றம் பெற்றது என்ற சுலபமான உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் தொட்டதெற்கெல்லாம் இனவாதம் பேசும் பெரும்பான்மை சக்திகள் திருந்தாதவரை இலங்கையில் இனமுரண்பாடு தீர்க்கப்படாது.

இறுதி யுத்தத்தில் நடந்த அநீதிகளுக்கு நீதி கோருவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எப்படி தமிழினத்துக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தருவார்கள்.

சர்வதேசம் பெரும்பாய்ச்சலுக்குத் தயாராவது போல ஏற்பாடுகளைச் செய்தாலும் அது இஞ்சியளவேனும் முன்னேற்றமடையாத பாய்ச்சலாயே இருந்து வருகிறது.

சர்வதேசத்தின் சங்கடத்தையும் இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

அதாவது, அமெரிக்க ஆதரவு நாடுகள், அமெரிக்க எதிர்ப்பு நாடுகள், மதில் மேல் பூனை நாடுகள் போன்ற பலதரப்பட்ட ரகங்களின் நடுவே ஐ.நாவில் இலங்கை விடயம் நவித்துப் போகும் செயற்பாடாகவே இருந்து வருகிறது.

அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதில் இருக்கும் நியாயத் தன்மையைக்கூடச் சீர்தூக்கிப் பாராமல் கண்ணை மூடிக்கொண்டு அதை எதிர்க்கும் நாடுகள் இருக்கும் வரை உலகின் எப்பாகத்திலும், அநீதிக்கான நீதி கிடையாது.

தவிர, நாங்கள் அங்கேயும் இல்லை, இங்கேயும் இல்லை நடுநிலை என இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் கூறிக்கொண்டாலும் அவை மதில் மேல் இருக்கும் பூனை போன்றவர்களே.

இவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தும் பேரினவாதச் சக்திகள் வெளிப்படையாகவே தமிழின எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போது செம்மணிப் மனிதப் புதைகுழி விவகாரம் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டர்க்கின் இலங்கை விஜயம் இடம்பெற்றிருந்தது.

செம்மணிப் பகுதியில் தொடர்ந்து அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் தற்போது 40 இற்கும் மேற்பட்டவர்களின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதில் பச்சிளம் குழந்தைகளின் உடலங்களும் புதைக்கப்பட்டுள்ளதான தகவல் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் குவியல் குவியல்களாக உடல்கள் புதைக்கப்பட்டுள்ளமை கூட்டுப்படுகொலையின் பின் புதைக்கப்பட்டவையாக இருக்கும் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

மேற்குறித்த அகழ்வின் போது சிறுவர்களின் விளையாட்டுப் பொம்மைகள் மற்றும் புத்தகப்பை என்பன அகழ்ந்தெடுத்ததான செய்தியைக் கேட்கும் போது மனது கனத்து விடுகிறது.

இவ்வாறான தகவல்களை எல்லாம் அறிந்திருந்த போதிலும் செம்மணிப் புதைகுழி விடயத்தில் திரிவுபட்ட கருத்துக்களைப் பேசுபவர்கள் இருக்கவே செய்கின்றனர்.

மனித உரிமை ஆணையாளரின் செம்மணி விஜயத்தையும் அவர் அங்கு உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதையும் இனவாதக்கண் கொண்டு பார்க்கும் விமல் வீரவன்ச அதனூடாக தனது அரசியல் ஆதாயத்தை மீட்டெடுக்க முற்படுவது தெளிவாகப் புலப்படுகிறது.

மனித உரிமை ஆணையாளரின் வருகையையும் அவரின் சந்திப்புக்களையும் வேறு திசைக்குத் திருப்பும் செயலை மிக இலாவகமாக மேற்கொண்டிருக்கிறார்.

அதாவது மனித உரிமை ஆணையாளரின் இலங்கை விஜயம் புலி ஆதரவாளார்களின் நிகழ்ச்சி நிரலுக்குட்படுத்தப்பட்டது என்றவாறு கூறுவது பெரும்பான்மைச் சிங்கள மக்களைக் குழப்பும் செயலே.

அத்துடன் செம்மணிப் புதைகுழிப் பகுதியில் மேலும் தோண்டுவதை நிறுத்துவது சகலருக்கும் நல்லது எனவும் அங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட பொது மக்களுடையதாக இருக்கலாம். அல்லது விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட படையினருடையதாக இருக்கலாம் அல்லது விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட பொலிஸாருடையதாக இருக்கலாம் என்று கூறியமை சர்வ சாதாரணமான விடயமல்ல.

இது செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிகளைக் குழப்பி அதைத் திசை திருப்பும் செயலாகவே தமிழினம் பார்க்கிறது.


இருப்பினும் இவரின் இவ்வாறான கருத்துக்கள் சிங்கள மக்களை குழப்புவதாக அமைந்துவிடும்.


தமிழினம் நடைபெறாத ஒன்றிற்கு நீதி கோரவில்லை என்பதை பேரினவாதச் சக்திகள் புரிந்துகொள்ள வேண்டும்.


இதைவிடுத்து நாய்க்கு எங்கு அடித்தாலும் பின்னங்காலைத் தூக்குவது போல எதற்கெடுத்தாலும் இனவாதம் பேசுவதை பெரும்பான்மை சக்திகள் நிறுத்த வேண்டும்.

இல்லையேல் அது மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிக்கும் செயலாக மாறிவிடும்.

**அபிமன்யு**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## ஆலயப் பிணக்குகளைத் தீர்க்க ஆணைக்குழு அமைக்க வேண்டும்

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. பண்டிதர் பரமலிங்கத்தைத் தவிர, மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் நிர்வாகியாக இருந்து மிகச் சிறந்த ஆன்மீகப் பணியாற்றிய சுதுமலையைச் சேர்ந்த சோமசுந்தரம் ஸ்ரீதரன் அவர்கள் கனடாவில் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயரமடைகின்றோம்.

ஸ்ரீதரன் அவர்கள், அடக்கமாக இருந்து ஆன்மீகப் பணியாற்றியவர். ஆழமான விடயப் பரப்பைக் கொண்ட ஸ்ரீதரன் அவர்களின் தன்னடக்கம் அவரின் சான்றாண்மைக்கு அணிகலனாகும்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி, பண்டிதர் ஐயா இந்தியாவுக்குப் போனவர் எண்டு அறிந்தன்.



சோமசுந்தரம் ஸ்ரீதரன்

**மூப்பர்:-** ஓ! திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில நாளை 7 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடக்கப் போகுது.


கும்பாபிஷேகத்திற்காகத் தான் பண்டிதர் இந்தியாவுக்குப் போனவர்.

**சாத்திரியார்:-** சொன்னாப் போல திருச்செந்தூர் முருகனுக்குத் தமிழில கும்பாபிஷேகம் நடப்பது தான் சிறப்பு.

**வாத்தியார்:-** திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில தமிழில கும்பாபிஷேகம் நடக்கிறதைத் தொடர்ந்து ஏனைய ஆலயங்களிலும் தமிழில கும்பாபிஷேகம் நடப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்குதெண்டு தான் நினைக்கிறன்.

**சிறாப்பர்:-** கட்டாயம் நடக்க வேணும். அதிலும் எங்கட யாழ்ப்பாணத்தில இப்ப ஒரு குறிப்பிட்ட சிவாச்சாரியர்கள் கோயில் பூசையில வியாபாரம் நடத்துகினம். அதிலும் மலையகத்தில உள்ள இளைஞர்களை இங்க கூட்டிக் கொண்டு வந்து, அவையளுக்கு அடிப்படை மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்துவிட்டு அவையளின்ர பொறுப்பில கோயில் பூசையை ஒப்படைத்து தாங்கள் சம்பளத்தை வாங்குகினம்.

அந்தச் சம்பளத்தில பூசை செய்யிற மலையகப் பிள்ளைகளுக்குக் கிள்ளித் தெளிப்பினம்.



இது பற்றிக் கடந்த முறையும் ஆலடியில கதைத்தனாங்கள்.

**சாத்திரியார்:-** அந்தணச் சிவாச்சாரியர் அல்லாத பிள்ளைகளை இங்க கூட்டிக் கொண்டு வந்து அவர்களை மூலஸ்தானத்திற்குள்ள விட முடியும் எண்டால், பக்தியோட வழிபடுகின்ற அடியார்கள் கருவறைக்குள்ள போறதில என்ன தீண்டாமை இருக்குது.

**வாத்தியார்:-** என்னைப் பொறுத்தவரை ஒரு சில அந்தணச் சிவாச்சாரியர்கள் தான், பக்திபூர்வமாகக் கிரியா வழிபாடுகளைச் செய்யினம்.

மற்றவர்கள் கோயிலை வியாபார ஸ்தாபனமாக்கிப் போட்டினம்.

இவ்வாறு நெறிமுறை தவறிய கிரியைகளால தான் எங்கட மண்ணில அவல மரணங்களும் அவலங்களும் மலிந்து கிடக்குது.

இதை விட, மந்திரங்களைப் பிழைபிழையாக உச்சாடனம் செய்யிறதால ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் தீவினை ஏற்படுகிறது.

ஆகையால இது தொடர்பில ஆலய பரிபாலன சபைகள் புனிதமான- கிரியா விளக்கமுள்ள சிவாச்சாரியர்களை பூசை வழிபாட்டிற்கு நியமிக்க வேணும்.

இதை விட்டிட்டு கொன்றாக் அடிப்படையில கோயில்களை எடுத்து, மலையகத்துப் பிள்ளைகள் மூலம் நித்திய பூசை நடத்தி வர்த்தகம் செய்யிறவர்களை உடனடியாக ஆலயங்களில இருந்து வெளியேற்ற வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இப்ப எங்கட சைவ ஆலயங்களில 90 வீதமான ஆலயங்கள் நீதிமன்றில வழக்கில இருக்குது.

உண்மையில சைவ ஆலயப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு சட்ட அந்தஸ்துள்ள ஓர் ஆணைக்குழு அல்லது ஒரு பஞ்சாயத்தை மாவட்டம் தோறும் அமைத்து ஆலயப் பிணக்குகளை முடிவுக்குக் கொண்டு வர வேணும்.

ஒரு காலத்தில மக்களிடையே ஏற்பட்ட பிணக்குகளை சைவ ஆலயங்களே தீர்த்து வைத்தன.

ஆனால் இப்ப அந்த ஆலயங்களை நீதிமன்றில நிறுத்திப் போட்டம்.

இவ்வாறானதொரு நிலைமை ஆலய வழிபாட்டை அர்த்தமற்றதாக்குகிறது.

**மூப்பர்:-** விதானையார் சொல்லுறது உண்மை தான்.

சைவாலயங்கள் தொடர்பில ஏற்படுகின்ற பிணக்குகளை- உரிமை சார்ந்த வழக்குகளை விசாரித்து உரிய தீர்ப்பை வழங்குவதற்கு சட்ட வலுவுள்ள ஆணையம் உருவாக்கப்பட வேண்டும்.

இது விடயத்தில இந்து கலாசாரத் திணைக்களம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தால் அது உதவியாக அமையும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோண்டத் தோண்ட செம்மணியில் எலு ம்புக் கூடுகள் வருகிறது என்றால்?






இரணைமடுக் குளத்தை நம்பியிராது குடாநாட்டில் பாரிய நீர்த்தேக்கங்களை அமைத்தால் என்ன வியாசரே?

**காகம் இருக்க பனம் பழம் வீழ்ந்தது என்பது எதுவோ வியாசரே?**

சண்மகன்-மந்துவில்

அண்மையில் ஒரு காணொளி பார்த் திருந்தேன்.

வீதியோர மின்கம்பத்தில் ஒரு பறவை வந்து இருக்கிறது.

அந்தக் கணம் அதிலிருந்த மின்குமிழ் ஒளிர்கிறது.

உனக்கான நேரம் வரும்போது எல்லாம் சரியாக நடக்கும் என அங்கு வாசகம் இடப்பட்டிருந்தது.

**கெட்டவர்களை நம்பும் பூமி நல்லவர் களை மதிப்பது இல்லையே ஏன் வியாசரே?**

தனிர்சன்-இணுவில்

நல்லவர் என்பதன் வரையறை என்ன என்பதில் தானே பிரச்சினையே இருக்கிறது.

ஊரில் ஒருவன் போதை வியாபாரி. அந்த ஊரின் அத்தனை இளைஞர் களின் சொர்க்காபுரியாக அவரின் வீடு இருந்தது.

திடீரென ஒருநாள் அவர் இறந்து விட்டார். அவரின் மரண வீட்டில் ஏகப்பட்ட சனம். வீதி ஓரங்களில் நூற்றுக் கணக்கான கண்ணீர் அஞ்சலி பனர்கள். பண்டல் பண்டலாய் வெடி கொளு த்தப்பட்டது.

அங்கு நின்றவர்களில் ஒருவர் கூறினார் இவர் போதை வியாபாரி தான். மற்றப்படி மிகச் சிறந்த மனிதன் என்று. எனக்கு தூக்கி வாரிப் போட்டது.

**இரணைமடுக் குளத்தை நம்பியிராது குடாநாட்டில் பாரிய நீர்த்தேக்கங்களை அமைத்தால் என்ன வியாசரே?**

சுரேசன்-பத்தமேனி

தமிழினத்துக்குத் தெரியாத தண்ணீர் அரசியல் ஒன்று இருக்கிறது. அதை எவராலும் சரி செய்து விட முடியாது.

தொண்டைமானாறு நன்னீர்த் திட்டம் 1953 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அதாவது தொண்டைமானாறு கடலுக்கு குறுக்காக தடுப் பனை அமைத்து நீர் ஏரியில் உவர் நீர் இணைவதைத் தடுத்து அதில் மழை நீரைச் சேகரித்து அதை விவசாயத்திற்கும் குடிநீர் தேவைக்கும் பயன்படுத்தும் சிறந்த திட்டம்.

அந்தத்திட்டத்தை கையில் எடுக்காமல் நீரில் அரசியல் பேசுவது தேவையான விடயம் அல்ல.

**பழமொழிகளுக்கு புதுமொழி கூறும் நிகழ் வுகள் தற்போது நடைபெறுவதில்லையே. பழமொழியொன்றிற்கு புதுமொழியொன்று கூறுங்களேன் வியாசரே?**

சிவம்-வதிரி

ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்: ஒரு குலை தேங்காய்க்கு ஒரு தேங்காய் பதம்.

குடிப்பது கூள், கொப்பளிப்பது பன்னீர்: உண்பது பழம்சோறு சொல்வது பீட்சா என்று.

பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை: ஐபோன் பற்றி அலட்டுகிறார் தம்பி சைனாப் போனிலே.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு: அளவுக்கதிகமாய் போன் பார்த்தால் கண் கெடுவது நிச்சயம்.


அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

076 097 3126

என்ற இலக்கத்திற்கு

SMS, Whats App செய்யுங்கள்


**இலங்கை கிரிக்கெட் அணியில் முன்னேற்றம் தெரிகிறதே வியாசரே?**

சர்வின்-யாழ்ப்பாணம்

பங்களாதேஷ் தொடரில் இலங்கை அணியின் செயற்பாடுகள் மிகவும் திருப்தி கரமாக இருக்கிறது.

இதே போக்கில் போனால் 1996 ஆம் ஆண்டின் நெருப்பு அணி போல இலங்கை அணி மாறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

அடித்தது பங்களாதேஷிற்கெல்லவா. இனி அடிக்க வேண்டிய பல அணிகள் இருக்கின் றன.

பொறுத்திருந்து பார்ப்போமே இலங்கை அணியின் செயற்பாடுகள் எப்படி இருக்கப் போகின்றன என்பதை.

**தோண்டத் தோண்ட செம்மணியில் எலு ம்புக் கூடுகள் வருகிறது என்றால்?**

ரிதுஷ்-வதிரி

எங்கள் கடந்த காலங்கள் மிகக் கொடு மையானவை. எமது இளம் சமுதாயத்திற்கு நாம்பட்ட இன்னல்களும் வலிகளும் இழப் புக்களும் இம்மியும் தெரியாது.

இரவு 8 மணிக்குப் பின் வீதிக்கு வர வேண்டும் என்றால் லாந்தர் விளக்குடனேயே வரவேண்டும். இல்லையேல் சூடு நிச்சயம்.

அடையாள அட்டை இல்லாமல் வெளியே சென்றால் கதை அவ்வளவு தான். குடும்பப் படத்துடனான குடும்ப அட்டை வைத்திருக்க வேண்டும். சோதனை நேரத்தில் அதில் ஒருவர் கூடினாலோ, குறைந்தாலே கதை முடிந்து விட்டதாகவே பொருள்.

விசேட அடையாள அட்டை, மோட்டார் சைக்கிளுக்கான பதிவு/ பாஸ், சுற்றிவளைப்பு, தலையாட்டி, கைது, காணாமல் போதல், சம் பந்தமே இல்லாமல் அடி, உதை, அவர்களுக்கு உறுத்தினால் காரியம் முடிப்பது. இப்படிப்பட்ட வலி நிறைந்த காலத்தை மீண்டும் நினைவு படுத்தியிருக்கிறது செம்மணித்திடல்.

**சிவபூமி என அழைக்கப்படும் குடா நாடு இன்று சவபூமி ஆகி விட்டதே?**

சுதன்-குப்பிளான்

தமிழினம் சபிக்கப்பட்ட இனம். அந்த இனத்துக்கு மீட்சியே இல்லை என்பது தான் முடிவு.

அந்தளவிற்கு தமிழினம் பாடுகளைக் கடந்து விட்டது. கடந்து கொண்டிருக்கிறது. இன்னும் கடக்க இருக்கிறது.

பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்தது என்ற வார்த்தைக்கு மிகப் பொருத்த மானவர்கள் தமிழர்களே.

**தமிழ் அரசியல்வாதிகள் பலர் அடக்கி வாசிக்கின்றனரே. ஏன் என்று வியாச ருக்குத் தெரியுமா?**

தவந்து-வவுனியா

அடுத்த இரண்டு வருடங்களில் தேர்தல் இல்லை என்பது ஒன்று.

மற்றையது தென்பகுதியில் பல அரசியல் வாதிகள் ஊழல் குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்படுகிறார்கள்.

அந்தக் குளிர்காற்று இந்தப் பக்கமும் அடித்திருக்குமோ என்னவோ. அதுவும் ஒரு காரணமாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

இதைவிட இன்னுமொன்று இருக்கிறது. அதாவது செம்மணிக்குச் சென்ற மூத்த அரசியல்வாதி ஒருவரை ஓட ஓட விரட்டிய செய்தியின் தாக்கமாகவும் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: தர்மயுத்தம்
இசை: இளையராஜா
பாடியவர்கள்: மலேசியா வாசுதேவன், S.ஜானகி



ஆகாய கங்கை பூந்தேன் மலர்சூடி
பொன் மான் விழி தேடி
மேடை கட்டி மேளம் தட்டி
பாடுதே மங்கலம் நாடுதே சங்கமம்

குங்குமத் தேரில் நான் தேடிய தேவன்
சீதா புகழ் ராமன்
தாளம் தொட்டு ராகம் தொட்டு
பாடுவான் மங்கலம் நாடுவான் சங்கமம்

காதல் நெஞ்சில் ஹே ஹே ஹே ஹே
மேள தாளம் ஹோ ஹோ ஹோ ஹோ
காதல் நெஞ்சில் ஹே ஹே ஹே ஹே
மேள தாளம் ஹோ ஹோ ஹோ ஹோ
காலை வேளை பாடும் பூபாளம்
மன்னா இனி உன் தோளிலே
படரும் கொடி நானே பருவப்பூ தானே
பூமஞ்சம் உன் மேனி
எந்நாளில் அரங்கேறுமோ

குங்குமத் தேரில் நான் தேடிய தேவன்
சீதா புகழ் ராமன்
மேடை கட்டி மேளம் தட்டி
பாடுவான் மங்கலம் நாடுவான் சங்கமம்

தேவை யாவும் ஹே ஹே ஹே ஹே
தெரிந்த பின்னும் ஹோ ஹோ ஹோ ஹோ
தேவை யாவும் ஹே ஹே ஹே ஹே
தெரிந்த பின்னும் ஹோ ஹோ ஹோ ஹோ
பூவை நெஞ்சில் நாணம் போராடும்
ஊர் கூடியே உறவானதும்
தருவேன் பல நூறு பருக கனிச்சாறு
தளிரான என் மேனி
தாங்காது உன் மோகம்

ஆகாய கங்கை பூந்தேன் மலரசூடி
பொன் மான் விழி தேடி
தாளம் தொட்டு ராகம் தொட்டு
பாடுவான் மங்கலம் நாடுவான் சங்கமம்
லாலலா லாலலா லாலலா லாலலா

# அணுகுண்டுகள் வெடித்தால் பூமி என்னவாகும்?

நீண்ட ஆயுளைக் கொண்ட இவ்வகை கதிரியக் கப் பொருட்கள் அணுகுண்டு வெடித்த நிலப்பரப்பில் கோடான கோடி ஆண்டுகள் நிலைத்திருக்கும் வல்லமை படைத்தது. அதனால் இந்த நிலம் நிரந்தரமாக விவசாயத்திற்கும் மக்கள் வாழ் வதற்கும் பயனற்றுப் போகும்.

யுரேனியம்-238 அணுக்களும் குண்டு வெடித்த இடத்தில் காணப்படும். இதுவும் காமா கதிரி யக்கத்தை உமிழும் பண்புடையது. இதன் அரை ஆயுள் காலம் 4468 கோடி வருடங்கள். யோசித்துப் பாருங்கள். சில அணுகுண்டுகள் பூமியை எந்த உயிரினமும் வாழத் தகுதியற்றதாக மாற்றும் வல்லமை படைத்தது எனப் புரிந்து கொள்ளலாம்.

அனைத்து உயிர்களுக்கும் தாய் பாக்டீரியம் என்ற நுண்ணுயிரி. இது சுமார் 320 கோடி ஆண் டுகள் முன்தான் பூமியில் தோன்றியது. பின்னர் இதனிலிருந்து பிற உயிர்களும் தோன்றின. இதன் அடிப்படையில் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தான் மனிதன் தோன்றினான் என்று சொல் லப்படுகிறது. யுரேனியம்-235 மற்றும் யுரேனியம் 238 போன்ற கதிரியக்கப் பொருட்களை அதிக அள வில் உற்பத்தி செய்து ஆங்காங்கே சிதறவிட்டால் பூமி நிரந்தரமாக உயிரினங்கள் வாழத் தகுதி யற்றதாக மாறிவிடும் அபாயம் உள்ளது. காரணம் இவை அடுத்த கோடான கோடி ஆண்டுகளுக்கும் மேலாக உயிரினங்களைத் தழைக்க விடாமல் தடுக்கும் வல்லமை படைத்தது.

### எப்படி இந்த கதிரியக்க பொருட்கள் உயிரினங்களை அழிக்கிறது?

"கதிரியக்கப் பொருட்கள் ஆங்காங்கே சித றுண்டு கிடந்தால் நமக்கென்ன" என எண்ண வேண்டாம். இதிலிருந்து வெளியேற்றப்படும் காமா கதிரியக்கம் தண்ணீரை உடைத்து OH- மற்றும் H+ அயனிகளை உண்டு பண்ண வல்லது. இந்த அயனிகள் உயிரினங்களின் மரபணுவைச் சுக்கு நூறாக உடைக்கவும் மற்றும் புரத கட்டமைப்பைச் சிதைக்கவும் முடியும். இதனால் உயிர்களின் உடலில் உள்ள செல்கள் அனைத்தும் செத்து மடியும். எனவே செடி கொடிகள் மற்றும் மரங்கள் மட்டும் அல்ல அனைத்து உயிரினங்களும் செத்து மடியும். பூமிக்குள் பல அடி ஆழத்தில் வாழும் உயிரினங்களும் ஆழ மான கடற்பகுதியில் வாழும் உயிரினங்களும் தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்புள்ளது. இவ்வாறாக அணு குண்டு வெடித்த இடம் உயிரினங்கள் வாழத் தகுதியற்றதாக மாறிவிடும்.

இது மட்டும் அல்ல, அணுகுண்டு வெடிப் பின்போது செனான்133 (Xenon-133), கிரிப் டான-89 (Krypton-89) போன்ற கதிரியக்கப் பொருட்கள் உற்பத்தியாகின்றன. இவை அனைத்தும் வாயுக்கள். இவற்றின் அரை ஆயுட் காலம் சில நிமிடங்களிலிருந்து சில நாட்கள் ஆகும். இவை எந்த தனிமத்துடனும் வாயுக்களுடனும் இணையாது. எப்பவுமே தனித்து தான் இருக்கும். இவற்றைச் சுவாசிக்க நேர்ந்தால் கொடுமையான மரணம் நிச்சயம்.

அணுகுண்டு வெடிக்கும் தருணத்தில் தண் ணீரில் யுரேனியம்-235, யுரேனியம்-238, சிசியம்-137 (Cesium-137) ஸ்ரோனியம்-90, ஐயோடின்-131 பேரியம்-140 ஆகிய கதிரியக்கப் பொருட்கள் கலக்கும். இந்த கதிரியக்கப் பொருட் களின் அரை ஆயுள் காலம் சில நாட்கள் முதல் கோடான கோடி ஆண்டுகள் வரையிலானது. கதிரியக்கப் பொருட்கள் கலந்த தண்ணீரைக் குடிப்பதும் பத்து மாடி கட்டடத்திலிருந்து குதிப்பதும் ஒன்றுதான். இரண்டிலும் சாவு நிச்சயம். இரண்டு நாட்கள் தண்ணீர் அருந்தாமல் இருந்தால் சிறுநீரக பாதிப்பால் மரணம் நிச்சயம் வரும். அதே நேரத் தில் கதிரியக்கப் பொருள் நிறைந்திருக்கும் குடி நீரைக் குடித்தா லும் விரைவில் பரிதாபமாக இறக்க வேண்டி வரும். எப்படி இறக்க போகிறோம் என்பது தான் கேள்வி.

இவ்வாறாகக் குண்டு வெடித்த நகரத்தின் நீர், நிலம், காற்று ஆகியவற்றில் கதிரியக் கத்தை உமி ழும் பொருட்கள் நிறைந்து காணப்படும். இதனால் பொதுமக்கள் கொத்துக் கொத்தாகச் செத்து மடிவார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இந்த அணுகுண்டு வெடித்த பகுதியில் காயத்துடன் உயிர் தப்பியவர்கள் அதிர்ஷ்டசா லிகள்தான் என நினைக்க வேண்டாம். கடுமை யான கதிர்வீச்சு காரணமாக அவர்களுக்கு சில ஆண்டுகளில் பல வகையான புற்றுநோய் வர வாய்ப்பு மிக அதிகம்.

ஓப்பன்ஹைமர் திரைப்படத்தில் அணு குண்டு சோதனை நடத்திய நியூ மெக்சிகோ பகுதியிலும் அங்கே வசித்த மக்களுக்கு கதிரியக்கத்தால் பாதிப்பு ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. மேலும் அணுகுண்டு வெடிப்பு ஏற்பட்ட இடம் விவசா யத்திற்கு முற்றிலும் பயன்படாது. கோடான கோடி வருடங்களாகப் பொட்டல் காடாகக் காட்சி அளிக்கும்.

மண்ணை நாசமாக்கும் அணுகுண்டு சோத னையை அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, சீனா, பிரான்ஸ், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வட கொரியா நடத்தியுள்ளது. கடல் தண்ணீருக்குள் வெடிக்கச் செய்யும் அணுகுண்டுகளையும் பல நாடுகள் சோதித்துப் பார்த்துள்ளன. விண்வெளி யிலும் இந்த சோதனையை அமெரிக்காவும் ரஷ்யாவும் நடத்தியுள்ளது. ஏன் இப்படி அணு குண்டின் மேல் இவ்வளவு மோகம்? எனச் சிந்தித்தால் சில நாடுகள் தம்மை உலக காவல் காரர்களாக நினைத்துக் கொள்கின்றன. பிற நாடு களைக் கட்டுப்படுத்தவே அணுகுண்டுகளை வைத்துள்ளதாக அவை கூறுகின்றன

இந்த அணுகுண்டு தயாரிப்பால் இரண்டே இரண்டு நன்மைகள்தான் உண்டு. நம் பூமி தண்ணீர் நிரப்பிய ஒரு மண் பாண்டம் எனலாம். இதன் மேல் ஒரு விண்கல் மோதினால் பேர ழிவை உண்டு பண்ணும். அதனால் பூமி மேல் மோத உள்ள விண்கற்களை அழிக்க இந்த அணு குண்டைப் பயன்படுத்தலாம்.

அடுத்து வேற்றுகிரகவாசிகள் யாராவது வந்து நம்மைத் தாக்கினால் விண்வெளியிலேயே அவர்களைக் கட்டுப்படுத்த அணுகுண்டுகளைப் பயன்படுத்தும் காலம் வரலாம்.

அணுகுண்டு தொழில்நுட்பத்தில்தான் அணு மின்நிலையங்கள் செயற்படுகின்றன. எனவே இந்த அணுகுண்டு தொழில்நுட்ப வளர்ச்சி மின் சாரம் தயாரிப்பதற்கு மிகவும் உதவுகிறது. அணு குண்டு தொழில்நுட்பத்தை கையாள்வது மனி தனின் கைகளில்தான் இருக்கிறது.

(முற்றும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய திரையுலகில் திகிக்கும் போதைத்தீ

ஜுனியர் விகடன்



'ரோஜாக்கூட்டம்', 'பார்த்திபன் கனவு', 'நண்பன்' என பல வெற்றிப் படங்களில் நடித்தவர் ஸ்ரீகாந்த். சமத்துப்பையன் தோற்றம் கொண்டவர் என்பதால் அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவையும் பரவலாகப் பெற்றவர்.

'அவரா இப்படி' என்று பலரும் அதிரும் அதேசமயம், "இந்தப் போதை வலையில் சிக்கினால், 10 ஆண்டுகள் உயிர்வாழ்வதே சிக்கல்தான். இது தெரியாமல் பலரும் சிக்கி மாய்கிறார்கள்" என்று வருத்தம் பொங்கக் கூறுகிறார், ஐ.ஆர்.எஸ் அதிகாரியும் மத்திய போதைப் பொருள் தடுப்பு அதிகாரியாகப் பணியாற்றியவருமான வெங்கடேஷ் பாபு.

**ஸ்ரீகாந்த் சிக்கியது இப்படித் தான்!**

சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள மதுபானக் கூடத்தில் தகராறு நடக்கிறது. இதுதொடர்பாக அ.தி.மு.க ஐடி விங்கின் முன்னாள் நிர்வாகியான பிரசாத் உள்ளிட்ட பலர் கைது செய்யப்படுகின்றனர். பொலிஸ் விசாரணையில் கொகைன் என்ற போதைப் பொருள் பழக்கம் பிரசாத்துக்கு இருப்பது தெரிகிறது.

பொலிஸ் தீவிரமாக விசாரிக்க... கொகைன் சப்ளை செய்த பிரடோ சிக்குகிறார். அவருடைய செல்போன் தொடர்புகள், பணப் பரிவர்த்தனை பற்றிய ஆய்வில்தான் ஸ்ரீகாந்த் கொகைன் வாங்கியிருப்பது தெரிகிறது. ஸ்ரீகாந்த் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதோடு, மருத்துவப் பரிசோதனை நடக்க... கொகைன் தொடர்புகள் உறுதியாகி, ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்டுள்ளார்.

**சம்பள பாக்கிக்காக... கொகைன்!**

'பிரசாத் தயாரித்த படத்தில் நடித்ததற்கான சம்பள பாக்கி 10 லட்சம் ரூபாய் இருந்தது. அதற்கு பதிலாக கொஞ்சம் கொஞ்சமாக கொகைனை எனக்கு அறிமுகப்படுத்தினார் பிரசாத். அதற்கு அடிமையாகி, தொடர்ந்து பணம் கொடுத்து வாங்குமளவுக்கு தவறு செய்துவிட்டேன்' என்று கூறியிருக்கிறார், ஸ்ரீகாந்த். இந்த நெட்வொர்க்கில் இருந்த நடிகர் கிருஷ்ணாவும் கைதாகியுள்ளார்.

இந்தப் பின்னணியில், ஐ.ஆர். எஸ் அதிகாரியும் மத்திய போதைப் பொருள் தடுப்பு அதிகாரியாகப் பணியாற்றியவருமான வெங்கடேஷ் பாபுவிடம் சில கேள்விகளை முன்வைத்துப் பேசினோம். இவர், அருணாசலப் பிரதேசத்தில் மேற்கொண்ட ஓர் அதிரடி ஆபரேஷன் மூலம் 5,000 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களை ஒழித்தவர். இளைய சமுதாயத்திடம் போதைப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வுக்காகத் தொடர்ச்சியான பிரசாரத்தையும் முன்னெடுத்து வருபவர்.

**ஸ்ரீகாந்த் கைது உணர்த்துவது என்ன?**

"போதைப் பொருள் விற்பவர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. அதன் ஆபத்தை உணராமல் பலரும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே இதுபோன்ற கைதுகள் உணர்த்துகின்றன. சினிமா நடிகர்கள் பிரபலமானவர்கள் என்பதால் இந்தக் கைது செய்தி அதிக கவனம் பெற்றிருக்கிறது. மற்றபடி போதைப் பொருட்களை சட்டவிரோதமாகப் பலரும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை."

**ஸ்ரீகாந்த் வாங்கியதாகக் கூறப்படும் கொகைன் பற்றிச் சொல்லுங்கள்?**

"இரசாயனங்களால் உருவாக்கப்படும் சிந்தெடிக் டிரக்ஸில் *(Synthetic drugs)* ஆயிரக்கணக்கானவை இருக்கின்றன. அவற்றில் 10 பெயர்கள் பிரபலமானவையாக இருக்கும். இப்போது ஸ்ரீகாந்த் விட



யத்தில் அடிபடுகிற கொகைன் என்பது கொக்கோ என்ற செடியிலிருந்து தயாரிக்கப்பட்ட 'நேச்சுரல் டிரக்ஸ்' (Natural drugs) வகையைச் சேர்ந்தது. இந்தத் தாவரம் ஆசிய நாடுகளில் இல்லை. தென் அமெரிக்கா, பொலிவியா, சிலி, கொலம்பியா, பெரு, மெக்சிகோ பகுதிகளிலேயே விளைகிறது. இதை ஒரு பவுடர் போலாக்கி போதைக்கு உபயோகிக்கிறார்கள். இதேபோல கஞ்சா மற்றும் ஹெரோயினும் நேச்சுரல் டிரக்ஸ் பிரிவைச் சேர்ந்தவையே. மெடிக்கல் சொப்களில் விற்கப்படும் ஒன்றுக்கும் மேற்பட்ட மருந்துகளைக் காக்டெயிலாக கலந்தும் சிலர் தவறாக போதைக்காக உபயோகிக்கிறார்கள். இதனை 'ப்ரிஸ்க்ரைப்டு டிரக்ஸ்' என்கிறோம்."

ஒரு கிராம் 12,000 ரூபாய்க்கு வாங்கியதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு விலை அதிகமாக இருப்பதன் காரணம் என்ன?

"கடத்தல் சந்தையில் விற்பனையாகும் போதைப் பொருட்களுக்குத் திட்ட வட்டமான விலை இல்லை. இருப்பினும், உலக போதைப் பொருள் அறிக்கை *(World drugs report)* என்ற ஓர் அறிக்கை முன்பு வெளியிடப்பட்டது. அதன்படி பார்க்கும்போது இது டூப்ளிகேட் கொகைன் போலவே தெரிகிறது. ஒரிஜினல் கொகைனின் விலை இதைவிட இன்னும் கூடுதலாகவே இருக்கும். மூக்கின் வழியே உள்ளிழுப்பதும் உண்டு."

**போதைப் பொருட்களுக்கு அடிமையாகிறவரின் நிலை என்னவாகும்?**

"இவை, அதிகபட்ச அடிமைத்தனத்தை மூளையில் உண்டாக்கும். ஓரிருமுறை பயன்படுத்திவிட்டால் மீண்டும் உபயோகிக்காமல் இருக்க முடியாது. இதற்கு காரணம், போதைப் பொருட்கள் நம் மூளையில் இருக்கும், உற்சாகம் தருகிற டோபமைன் என்கிற நியூரோ டிரான்ஸ்மிட்டரை அளவு கடந்து தூண்டி விடும். இதனால் ஒரு வித பரவச நிலையும் கிடைக்கும். இந்த சந்தோஷத்தை அனுபவிக்கிற ஒருவர், மீண்டும் மீண்டும் அந்த மயக்கத்தை விரும்புவார்.

முதலில் ஊக்க மருந்தாகச் செயற்பட்டு பின்பு அடிமைத்தனத்தில் சிக்கவைக்கும். தலைவலி, வாந்தி, பதற்றம், இரத்த அழுத்தம் அதிகரிப்பு, மூச்சுவிடுவதில் சிரமம், கண்ணின் கருவிழி பாதிக்கப்படும் நிலை, வலிப்பு நோய், தசைகள் செயலிழப்பு போன்றவை ஏற்படும். தற்கொலை எண்ணங்கள், வன்முறை மனோபாவம் என போதைப் பொருட்களால் உண்டாகும் பின்விளைவுகள் மிகவும் ஆபத்தானவை."

**போதைப் பழக்கத்தில் இளைய சமூதாயம் சீரழிய என்ன காரணம்?**

"போதைப் பொருட்கள் பற்றி நாம் வெளிப்படையாகப் பேசுவதில்லை என்பதுதான் காரணம். விழிப்புணர்வாலேயே போலியோவை ஒழித்தோம். தீவிர பிரசாரத்தினாலேயே ஹெச்.ஐ.வியை கட்டுப்படுத்தியிருக்கிறோம். அதேபோல் போதைப் பொருட்கள் பற்றி தயக்கமில்லாமல் வெளிப்படையாகப் பேச வேண்டும். போதைப் பொருட்கள் பற்றி பேசினாலே குழந்தைகள், இளைஞர்கள் கெட்டுப் போய்விடுவார்கள் என்



கிற பயம் அர்த்தமற்றது. எப்படியிருந்தாலும் இளைஞர்கள் அதுபற்றி முறையற்ற தகவல்களைத் தெரிந்து கொள்ளத்தான் போகிறார்கள். ஆனால், அதன் பின்விளைவுகள் எந்தளவு மோசமானவை என்று முன்பே நாம் முறையாகக் கற்றுக் கொடுத்துவிட்டால் அதன்பக்கம் செல்லாமல் தடுத்து விடலாம். இதனால்தான் 2003 ஆம் ஆண்டில், 'போதைப் பொருட்கள் குறித்து நாம் பேசுவோம்' என்ற கருப்பொருளை ஐ.நா முன்னெடுத்தது. எனவே, தயக்கமில்லாமல் இளைய தலைமுறையினருடன் உரையாடுவதே போதைப் பொருளைத் தடுக்கும் வழி. போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதற்குத்தான் தடை இருக்க வேண்டும். பேசுவதற்குத் தடை இல்லை.

உலகிலேயே இந்தியாவில்தான் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகம். அப்படிப்பட்ட ஆற்றல் மிக்க நாட்டின் சொத்துகளைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை. அரசாங்கம் போதைப் பொருட்களுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடத்தல்காரர்கள் கைது செய்யப்படுகிறார்கள். போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இத்துடன் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே இதுபற்றிய பிரசாரத்தைத் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும். பெற்றோர் தங்கள் குழந்தை 12, 13 வயதை எட்டிவிட்டாலே போதைப் பொருட்களின் விபரீதம் பற்றிப் பேச வேண்டும்."

**போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்க முடியுமா?**


"ஆல்கஹாலுக்கு அடிமையானவர்களை மீட்பதே பெரும் சவாலாக இருக்கிறது. டிரக்ஸ்°க்கு அடிமையானால் மறுவாழ்வு முறையில் மீட்டு கொண்டு வருவதும் மிகமிக கடினம். வாழ்க்கையில் 10 ஆண்டுகளை இவர்கள் கடப்பதே சிக்கலாகிவிடும். அப்படியே உயிர் வாழ்ந்தாலும் நடைப்பிணமாகவே வாழ வேண்டியிருக்கும். யாருக்கும் எந்தப் பயனும் இருக்காது. எனவே, அந்த வலைக்குள் சிக்காமல் இருப்பதுதான் பாதுகாப்பானது..." என எச்சரிக்கிறார் வெங்கடேஷ் பாபு.

போதையென்பது... ஒரு பாம்பு விஷம் தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலி

விநாயகர் சாந்தை
மு.ரமேஷ்



ஓ! என்
இன்ப துன்பமே
உன்னை காதலித்தேன்
இன்னும்
காதலித்துக்
கொண்டிருக்கிறேன்
ஆனாலும்
என்னை நீ
காதலிப்பதாக
தெரியவில்லை...
காதோரம் நரைத்த
முடியான காலமும்
வந்துவிட்டது
காதலியே!
என் வாழ்க்கையே
என்னை காதலியேன்

# கலக்கும் கந்தர்...





கந்தரும் கனடா செல்ல
காத்திரமான பிளேனில் ஏறி
அந்தரத்தில் விழுமோ என்று
அடித்தும் ஆட்டியும் பார்த்தார்
தொந்தரவு இன்றி தொலைதூரம்
தொலையாமல் செல்லவாம் என்றே
கந்தரும் பிளேனில் பறந்ததும்
கீழே வீழ்ந்தாரே கனவில்!

கவிவேந்தர் பொன்.சுகந்தன்

# வீதி விபத்துக்கள்



காட்டு வழி சென்று வந்தோம்
கால் கடுத்தால் ஓய்வெடுத்தோம்
ஆனால் விபத்தொன்றும்
நடந்ததில்லை, கேட்டதில்லை!

மாட்டு வண்டிப் பயணத்தில்
மகிழ்வோடு சென்று வந்தோம்
விபத்தினையும் கேட்டதில்லை
உயிரிழப்பும் நேர்ந்ததில்லை

இன்று காப்பெற் ரோட்டில்
பயணிக்கிறோம்
நிம்மதியைக் காணவில்லை
தினந்தினம் விபத்தினையே
காணுகின்றோம்!

பருவத்து இளைஞர்களின்
அதிவேக ஓட்டமது
மதுவைப் பருகி விட்டு
சிட்டாய்ப் பறப்பது தான்!

வீதிக்கும் சட்டமுண்டு
மானிடர்க்கும் சட்டமுண்டு
அறிவற்ற மூடன்; அவன்
உயிரிழப்பைத் தேடுகிறான்!

தலைக் கவசம் அணிகின்றான்
தலைக்கு அது பாதுகாப்பு
அதற்குள்ளே தொலைபேசி
தொல்லைபேசி ஆகிவிட
காதுகளும் மடங்கி விட
சீரின்றித் தவிக்கின்றான்!

நித்திரைத் தூக்கத்தில்
சாரத்தியம் செய்கின்றான்
பாரத்தையும் இழுக்கின்றான்
வீதி நிலைமை பாராமல்
விழுகின்றான் பள்ளத்தாக்கில்
அந்தோ பரிதாபம்!
என்பு தானும் மிஞ்சிடுமா...?

திருமதி.தவமணிதேவி கனேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம்,
சிவபுரவளாகம், முகமாலை.

# கவிதைக் கலசம்

## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

# பழகிய காலங்கள்



காதலியே உனை
நினைத்து
கல்நெஞ்சு கரைகிறது:
பேதலித்து போனவனுக்கு
பெண்ணே நீதான் வாழ்வு

பள்ளி செல்லும் போது
பார்வைக்காய் ஏங்குவேன்!
துள்ளும் உன் கண்கள்
தூக்கும் எனக்கு சேதி:

பருவத்துக் காதல்
உருவத்தில் தெரியும்!
புருவம் முதல் குதிவரை
பெண்ணே ரசிப்பேன்

மிதிவண்டி பயணம்
மீட்டும் என்னை;
குதிகூட ஆடாமல்
கண்ணே உன் பயணம்

அழகை வர்ணிக்க
அவனியில் ஆள்இல்லை;
பழகிய காலங்கள்
பசுமரத்தாணி போல்

சிவா - தும்பளை, பருத்தித்துறை.

# சிந்தனை செய்திடுவாய்



உன் பாட்டன்
கடல் கடந்து
பேரரசு கண்ட மாமன்னன்
நீயோ - இன்று
உடல் குறுகி மற்றவருக்கு
குடை பிடிக்கும் சிறு மனிதன்
மறவன் தமிழன் - மானத்துக்காக
வாழ்ந்தான்; மானத்துக்காகவே
மரணித்தான்
நீயோ - ஈனப்பிறவியாகி
இப்படி வீழ்ந்துவிட்டாய்
செத்தவரைப்போல் திரிபவனுக்கு
கொற்றவரைப் போல் எண்ணம் வேறு
அன்று ஓடிய இரத்த ஆறு

ஆயிரமாயிரம் ஆத்மாக்கள் இங்கு
அமைதியின்றி அலையும் போது
உனக்கு உயர்வு ஏது கூறு
மறப்பதற்கும் மன்னிப்பதற்கும் உனக்கு
மகாத்மா என்ற எண்ணம் வேறு
வங்கக் கடலோரம் அன்று
மரணித்துப் போய்விட்ட உடலங்கள்
அதையும் கூட மறந்து இப்படி நடக்கின்றாயே
வீசுகின்ற எலும்புத்துண்டுகளுக்கு
விடாமல் என்றும் ஓடியபடி..
பேசுகின்றது கூட உலகின்
பெருமைக்குரிய முதன்மொழி, இப்படி
காசுக்கும் கதிரைக்கும் காலங்காலமாக
பிறரிடம் அலைவதுதான் உன் வழியா?

[illegible] இமையாணன் - உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதப் போரில்



# ஜனாதிபதியைக் காக்கும் விமானம்

இஸ்ரேல் - ஈரான் இடையே போர் நடைபெற்றுவரும் சூழலில், அமெரிக்கா இராணுவ ரீதியில் நேரடியாக ஈரானைத் தாக்கத் திட்டமிட்டு வருகிறது.

இந்தச் சூழலில் கவனம் பெறுகிறது வோஷிங்டனுக்கு கொண்டுவரப்பட்ட டூம்ஸ்டே பிளேன் **E-4B Nightwatch** என அழைக்கப்படும் அந்த விமானம் பாதுகாப்புச் செயலாளரையும் பிற பாதுகாப்பு அதிகாரிகளையும் பாதுகாக்கும் என நியூயோர்க் டைம்ஸ் தளம் கூறுகிறது.

அணு ஆயுதப் போர் நடைபெற்றாலும், அரசு தொடர்ந்து இயங்குவதற்கு இந்த விமானம் இன்றியமையாததாக இருக்கும். எனவே இந்த விமானத்தை லூசியானா மகாணத்தில் இருந்து மேரிலாந்திற்கு எடுத்து வந்துள்ளனர்.

டூம்ஸ்டே விமானம் அல்லது அழிவுக்கால விமானம் அமெரிக்காவின் விமானப்படையால் இயக்கப்படுகிறது.

நெருக்கடி காலத்தில் இந்த விமானத்தில் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் கூட்டுப்படைகளின் தளபதிகள் ஆகிய உயர் பதவியில் இருப்பவர்கள் பாதுகாப்பாக இருக்க முடியும். இதிலிருந்து நாடுமுழுவதும் தொடர்புகளைப் பராமரிக்கவும் உத்தரவுகளை வழங்கவும் முடியும்.

இந்த விமானத்தில் 112 உறுப்பினர்கள் செல்ல முடியும். 11,260 கிலோமீற்றர்களுக்கு மேல் தொடர்ந்து பயணிக்கக் கூடியது. இந்த விமானங்கள் சைபர் தாக்குதல்கள், அணு ஆயுத தாக்குதல்கள், மின்காந்த விளைவுகளை எதிர்கொண்டாலும் ஆபத்துகளிலிருந்து தப்பி உறுதியாக இருக்கும் என்கின்றனர். நேரடித் தாக்குதல்கள் நடத்தப்படும் பட்சத்தில் பதில் தாக்குதல் நடத்தும் திறனும் இவற்றிடம் உள்ளது.

இந்த விமானம் வெப்பம் மற்றும் அணுக் கருவில் இருந்து பாதுகாக்கும் கவசத்தைக் கொண்டிருக்கிறது. இதன் மூக்கு பகுதியிலிருக்கும் ரேடோமில் உள்ள 67 செயற்கை கோள் டிஷ்கள் மற்றும் ஆன்டனாக்கள் மூலம் உலகின் எந்தப் பகுதியையும் தொடர்புகொள்ள முடியும்.

ஒருவாரம் வரை இந்த விமானம் தரையிறங்காமல் வானிலேயே இயங்க முடியும். பறந்துகொண்டிருக்கும்போதே இதன் எரிபொருளையும் நிரப்பிக்கொள்ள முடியும் என்கின்றனர்.

அமெரிக்காவில் இப்போது 4 டூம்ஸ்டே விமானங்கள் உள்ளன. தொடர்ந்து பயிற்சியில் ஈடுபடும் இந்த விமானங்களில் ஒன்று போர் சூழலில் வோஷிங்டன் வந்திருப்பது தான் பேசுபொருளாகியிருக்கிறது.

# ஆச்சி அறிவுரை



## இறந்த உடல் சிவனுக்கு ஒப்பானது

**பேராண்டி...** ○ மாவை.நா.கஜேந்திரன்

வாழ்க்கையின்ர தத்துவம் மிகப்பெரியது. அது மனிதருக்குப் புரிபிறதில்லை. அதைப் புரிஞ்சுகொண்டால் மனிசர் எண்டுற நிலையிலை இருந்து ஞானி எண்டுற நிலைக்கு வந்திடலாம்.

போனகிழமை ஒரு மரணச் சடங்குக்குச் சென்றிருந்தேன். அபரக் கிரியை செய்ய வந்த ஐயா பொலிஞ்ச மனிசன்.

கிரியைகள் எல்லாத்தையும் முறைப்படி எந்தப் பிசகும் இல்லாமல் திறமாகச் செய்தார்.

மந்திரங்கள் கூறும் போது அதுக்கேற்ற முகபாவம், அசைவுகள் எண்டு ஒரு தேர்ச்சி பெற்றவரா இருந்தார்.

கிரியைகள் எல்லாம் முடிய எல்லாரும் அமைதியா இருங்கோ. உங்களோட ஒருசில விடயங்கள் பகிர்ந்து கொள்ளுறன் எண்டார்.

முதலிலை இறந்தவருக்கு அஞ்சலி தெரிவித்து, அவரின்ர குடும்பத்துக்கு ஆறுதல் கூறி, அவரின்ர ஆத்மா நித்திய பேரின்பம் அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறன் எண்டுகூறி தொடர்ந்து பேசினார்.

மனிதன் இறந்தால் அந்த உடல் சிவன். எங்கட சமூகம் கிரியை முறைகளை எல்லாம் தலைகீழாச் செய்யத் தொடங்கிட்டுது.

முக்கியமா கிரியைகள் நிறைவுபெற பிரேதப் பெட்டியைத் தூக்கி அந்த இடத்திலை போட்டிருக்கிற பந்தல் காலிலை மூண்டுதரம் இடிக்கிறது புதுக்கலாசாரமா தொற்றிவிட்டுது.

இறந்தவர் சிவனுக்கு ஒப்பானவர் எண்டால், அவரை இப்பிடிச் செய்யிறது சிவனை அவமதிக்கிற மாதிரியெல்லோ.

அதோட 31 ஆம் நாள் கிரியை செய்யிறத்துக்கு முதள்நாள் வீட்டிலை துடக்குக் கழிச்சிட்டு அடுத்தநாள் 31 ஆம் நாள் கிரியைகளை செய்யினம். அது மகா தவறு.

மரணச் சடங்கிலை இறந்த உடலுக்குச் செய்யிற அத்தனை கிரியைகளும் 31 ஆம் நாளிலையும் வைக்கோல் பாவைக்கு செய்யப்படும். அப்படியென்றால், அந்தியேட்டி கிரியைகளை முடிச்ச பிறகுதானே வீட்டிலை துடக்கு கழிக்கவேணும். அதுதான் சரியான முறை.

எங்கட குருவானவர்கள் ஒருசிலர் இதுகளை சரியான முறையில சொல்லாமல் விட்டதால, இப்படிப்பட்ட பிறழ்வுகள் எங்கட கலாசாரத்துக்குள்ள புகுந்திட்டுது எண்டு பேசி முடிச்சார்.


பேராண்டி: அங்க நிண்ட சனங்கள் அத்தனையும் வலு அமைதியா அவர் சொன்னதைக் கேட்டது பிரம்மிப்பா இருந்துச்சு.


ஐயர் வெளிக்கிட்டுட்டார். பிரேதப் பெட்டியைத் தூக்க அங்க நிண்ட ஒருத்தர் ஓடிவந்து பெட்டியை மூண்டு தரம் பந்தலிலை இடியுங்கோ எண்டார்.

25 வயது மதிக்கத்தக்க ஒரு பெடியன்: "அப்பிடிச் செய்யிறது பிழை எண்டு ஐயா சொன்னது விளங்கல்லையோ" எண்டு கேட்டான்.

எனக்கு வலு சந்தோஷம். ஒரு விடயத்தை ஏன்? எதுக்கு செய்யிறம் எண்டு தெரியாமல் அதுதான் முறை எண்டு செய்யிறது மந்தைகள் வேலி பாயிறத்துக்கு ஒப்பானதெல்லோ பேராண்டி.

**ஆச்சி வருவா...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்களைப் பக்கம்...



ஜவ்வரிசி பாயசம் செய்யும்போது இரண்டு டீஸ்பூன் வறுத்த கோதுமை மாவைப் பாலில் கரைத்து ஊற்றிச் செய்தால் பாயசம் கெட்டியாகவும் ருசியாகவும் இருக்கும்.

பட்சணங்கள் தயாரிக்க மாவு பிசையும் போது சிறிது தேங்காய் எண்ணெயும் சேர்த்துப் பிசைந்தால் பட்சணங்கள் கூடுதல் வாசனையாக இருக்கும்.

வேர்க்கடலையை வறுத்துப் பொடியாக்கி, சப்பாத்தி செய்யும் மாவுடன் கலந்து சப்பாத்தி செய்யும் போது வாசமும் சுவையும் அதிகரிக்கும்.

கீரையைக் கழுவும் நீரில் சிறிதளவு உப்பு, மஞ்சள்தூள் சேர்த்து கழுவ நச்சுகள் நீங்கி, கீரை சுத்தமாகிவிடும்.

# பளிங்கு முகத்தில் பருக்களா?



டீன்ஏஜ் பருவத்தில், கண்ணாடியின் முன் நின்று "அழகாக இருக்கிறோமா..." என்று அடிக்கடி முகம் பார்ப்பது சகஜம். முகத்தில் சிறு புள்ளி தெரிந்தாலும், சிணுங்கத் தொடங்கி விடுவார்கள். வெயிலின் உக்கிரம் உலுக்கி எடுத்ததன் விளைவு பெரும்பாலான "பருவப் பெண்களின் முகத்தில் பருக்கள் தோன்றி, முக வாட்டத்தை அதிகரித்து விட்டது. பருக்கள் ஏன் வருகிறது? வந்தால் தடுக்க என்ன வழி?

**தடுக்க சில வழிமுறைகள்:**

நம் பாரம்பரிய வழக்கப்படி, தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பதுதான் இதற்கு சிறப்பான தீர்வு

நல்லெண்ணெயை உச்சந் தலை, தொப்புள் மற்றும் கால் பெருவிரல் இரண்டிலும் நன்றாகத் தேய்த்து மசாஜ் செய்த பின் குளிக்கவேண்டும்.

அதிக சூடு உள்ளவர்கள் சந்தனாதி தைலம் மற்றும் வில்வப்பழத் தைல எண்ணெய்களைப் பயன்படுத்திக் குளிக்கலாம்.

நீராகாரம், இளநீர், மோர், பழச்சாறு போன்றவற்றை அடிக்கடி குடிக்க வேண்டும். எலுமிச்சை, இஞ்சி, தேன் சேர்த்த சாறுடன் பருக வேண்டும்.

சின்ன வெங்காயத்தை மோருடன் கலந்து தினமும் மதியம் பருகலாம்.

நிறையப் பிஞ்சு வெள்ளரியை அடிக்கடி சாப்பிடுங்கள்.

நுங்கு நீரை பருக்கள் இருக்கும் இடத்தில் தடவிவர வேண்டும்.

சந்தனத்தை நன்றாக குழைத்துப் பூசிவர, பரு காய்ந்து போகும்.

குப்பைமேனிக் கீரையுடன் பூசுமஞ்சளை அரைத்து முகத்தில் தேய்க்க, பரு மறைந்துவிடும்.

சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சை வேர், கோரைக்கிழங்கு, பாசிப்பருப்பு போன்றவற்றால் தயாரிக்கப்படும் நலுங்கு மாவால் முகம் கழுவினால், பருவின் வீரியம் கட்டுப்படும்.

# இளமையின் இரகசியம் கூறும் உணவுகள்



ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைப் பின்பற்றினால் போதும். முதுமையைத் தள்ளிப் போடலாம் போடாக்ஸ் **(Botox)** போன்ற ஆன்டி ஏஜிங்குக்கான சிகிச்சைப் பக்கமெல்லாம் தலைவைத்துப் படுக்கவேண்டிய அவசியமே இருக்காது என்கிறார் ட்ரைகாலஜிஸ்ட் தலத் சலீம். இளமையைத் தக்கவைக்க அவர் தரும் **ஐந்து ஆலோசனைகள் இங்கே...**

கீரை, புரோக்கோலி, தக்காளி, தர்ப்பூசணி, திராட்சை, கொய்யா, கொண்டைக்கடலை, ஓட்ஸ், சிவப்பரிசி இவையெல்லாம் சருமம் காக்கும் உணவுப்பொருட்கள். ரிபோ.ஃப்ளேவின், நியாசின், சயானோகோபாலமின் **(Cyanocobalamin)** போன்ற விற்றமின்கள் நிறைந்த சில உணவுகளை அன்றாட உணவுப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளுங்கள். திரவ உணவுகளை அதிகம் உட்கொண்டால், உடலிலுள்ள நச்சுகள் வெளியேறிவிடும். பாதாம் பருப்பிலும் வால்நட்டிலும் விற்றமின் ஈ நிறைந்துள்ளது. இது, சருமத்தைப் பாதுகாக்கும். கிரீன் டீ, தயிர், தேன் ஆகியவையும் சருமத்துக்கு நல்லவை.

சர்க்கரையும் கார்போஹைட்ரேட்டும் நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிடுவது சருமத்திலிருக்கும் கொலாஜனை பாதித்து, சுருக்கத்தை ஏற்படுத்திவிடும். இவற்றுக்கு பதிலாகப் பழங்களையும் காய்கறிகளையும் சேர்த்துக் கொள்வது சருமத்துக்கு நல்லது.

முதுமையைத் தள்ளிப்போட நினைப்பவர்கள் முக்கியமாகத் தவிர்க்கவேண்டியது ஆல்கஹால். இது உருவாக்கும் ஃப்ரீ ராடிக்கல்ஸ் சருமத்திலிருக்கும் செல்களை பாதித்து, விரைவில் முதுமைத் தோற்றத்தை ஏற்படுத்திவிடும். கவனம்!

# கொள்ளு இட்லி

## சமைப்போம் சுவைப்போம்



### தேவையானவை :



1. கொள்ளு – ஒரு கப்
2. இட்லி அரிசி – 3 கப்
3. வெந்தயம் – 2 டீஸ்பூன்
4. உப்பு – தேவைக்கேற்ப
5. சமையல் சோடா – சிறிதளவு

**சட்னி மற்றும் சாம்பாருடன் கூடாகப் பரிமாறவும்.**
**கொள்ளு விளைச்சல் தென்னிந்தியாவில்தான் அதிகம்.**

### செய்முறை

கொள்ளு மற்றும் இட்லி அரிசியை சுமார் 5 - 6 மணி நேரம் தனித் தனியாக கழுவி ஊறவைக்கவும். அரைப்பதற்கு ஒரு மணி நேரம் முன் ஊறவைத்த அரிசியில் வெந்தயம் சேர்க்கவும். கொள்ளுவைத் தண்ணீரிலிருந்து வடிகட்டி, மென்மையாக அரைக்கவும்.

இப்போது அரிசியை வடிகட்டி மென்மையாக அரைக்கவும். இதில் உப்பு மற்றும் கொள்ளு கலவையைச் சேர்க்கவும். கைகளைப் பயன்படுத்தி நன்கு கலந்து, சுமார் 6 - 8 மணி நேரம் புளிக்க வைக்கவும்.

பிறகு, சமையல் சோடா மற்றும் தேவையான நீரைச் சேர்த்து கலக்கவும். மாவை இட்லித் தட்டில் ஊற்றி, இட்லி குக்கருக்குள் வைத்து, சுமார் 10 நிமிடங்கள் ஆவியில் வேக வைக்கவும்.

**ஆரோக்கியமான கொள்ளு இட்லி தயார்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தான் பக்கம் திரும்பும் கழுகின் பார்வை

சாந்தையூரிவன் – தி.ராம்குமார்

சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவின் உளவுத்துறையின் செயலர் "பாகிஸ்தான் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணுசக்தி ஏவுகணைகளைத் தயாரிக்க முயற்சிப்பதாக" தெரிவித்துள்ளார்.

இந்த ஏவுகணைகள் 5500 கிலோமீற்றருக்கும் அப்பால் சென்று தாக்கக்கூடியவை என்றும் அமெரிக்காவின் பல பகுதிகளை மிகவும் துல்லியமாகத் தாக்கி அழிக்கக்கூடிய திறன் கொண்டவை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த ஏவுகணை தயாரிப்பு தொடர்பாக, பாகிஸ்தானுக்கு, அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

ஏற்கனவே இந்தியாவின் "ஆப்ரேஷன் சிந்தூர்" தாக்குதலால் நிலை குலைந்த பாகிஸ்தான், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை தயாரிப்பில் ஈடுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தக் கூற்றில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறதோ: இல்லையோ, பாகிஸ்தானை ஒரு வழிபண்ண வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு இருக்கிறது. ஏனென்றால், முஸ்லீம் நாடுகளில் பாகிஸ்தான் மட்டுமே அணு ஆயுத வல்லரசாக உள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை எந்த ஒரு முஸ்லீம் நாடுகளையும் சந்தேகக் கண்ணோட்டத்துடனேயே பார்க்கும். எந்த அளவிற்கு பக்கத்தில் வைத்திருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு பக்கத்தில்வைத்திருக்கும். பாதை மாறும்போது பழி வாங்கும். காரணம் அமெரிக்காவால் வளர்க்கப்பட்ட முஸ்லீம் நாடுகள் நடந்துகொண்ட விதம் அப்படி. உதாரணத்திற்கு: ஆப்கானிஸ்தானில் தாலிபான்களை வளர்த்தது அமெரிக்கா. அழிவிற்குட்படுத்தியது அமெரிக்கா. ஈராக்கில் சதாம் ஹுசைய்னை வளர்த்தது. பின்லேடனை வளர்த்ததும். அழித்ததும் அமெரிக்காதான்.

எப்போதுமே இந்த உலகின் முதலாவது அதிகாரம் கொண்ட ஆளும் சக்தியாகத்தான் இருக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் பேராசை. இதற்காகத்தான் உலகெங்கும் ஆயுத மோதல்களை உருவாக்கி, ஆயுத வியாபரம் செய்வதும் ஆயுதத்தின் வீரியத்தை பரீட்சித்துப், பார்ப்பதும் பின் ஆயுத மோதலை நிறுத்தி தனக்குச் சார்பான ஆட்சியை நிறுவி தன் கைக்குள் வைத்திருப்பதுவும் அதனது கொள்கை. அமெரிக்காவிற்கு நிகராக - இன்னும் சொல்லப் போனால் அதிகமாகவே மிகவும் குறுகிய காலத்தில் பொருளாதாரம், கல்வி, விண்வெளி விஞ்ஞான தொழில்நுட்பம் என்று சகல துறைகளிலும், அபார வளர்ச்சியடைந்து வந்த நாடு, இடதுசாரி சமத்துவக் கொள்கையை பின்பற்றிய ரஷ்யா.

ரஷ்யாவையும், அதனோடு சேர்ந்த சோவியத் குடும்பத்தையும் கலைப்பதற்கு, பல கோடிக் கணக்கான டொலர்களை செலவு செய்தது அமெரிக்கா. மத நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் (என்.ஜீ.ஓ) கல்விமான்கள் என்று சகல வழிகளையும் பயன்படுத்தியது.

சோவியத் குடும்பம் கலைக்கப்பட்ட பின்னர், அன்றைய காலகட்டத்தில் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சராக இருந்த கிளாரா என்பவர், இந்த உலகத்திற்கு ஒரு செய்தியை கூறினார். அதாவது "இந்த உலகம் ஏற்றுக் கொண்டாலும் சரி: ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, இந்த உலகம் எங்களின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது."

இந்த அகம்பாவம் கொண்ட வார்த்தையை "தாயகம்" என்ற சஞ்சிகையில் கட்டம் கட்டப்பட்ட செய்தியாக படித்தது ஞாபகம் இருக்கிறது.

ஆனால், இப்போது சமீபத்தில் சீனா ஒரு செய்தியை உலகத்திற்கு சொல்லியிருக்கிறது. அதாவது "இந்த உலகை ஒரு சிறு குழு அதிகாரம் செய்த காலம் முடிவிற்கு வந்துவிட்டது" என்று.

மேலும் அமெரிக்காவைப் பற்றி விமர்சனம் செய்பவர்கள் தங்கள் நாட்டிற்கு வருவதோ, அமெரிக்கக் குடியுரிமை பெறுவதோ, இல்லாமல் ஆக்கப்படும் என்று ட்ரம்ப் அறிவித்ததாக அறிய முடிகின்றது.

தற்போது நடக்கின்ற இஸ்ரேல், ஈரான் யுத்தத்தில் பாகிஸ்தான் உட்பட பல முஸ்லீம் நாடுகள் அமெரிக்காவிற்கு எதிராக தங்களின் முனைப்பைக் காட்டியிருந்தன.

இந்த முஸ்லீம் நாடுகள் ஓரணியாக திரண்டால் விளைவுகள் மோசமாகும் என்பதும் அமெரிக்காவிற்கு தெரியும். சமீபத்தில் போர் நிறுத்தத்தை இஸ்ரேல் மீறிவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரேல் மீதும் சினம் கொண்டிருந்தார். கடுமையான சொற்பிரயோகங்களையும் உதிர்த்திருந்தார். என்னதான் இருந்தாலும் இஸ்ரேலை அமெரிக்கா கண்டிக்குமே தவிர தண்டிக்காது.

இற்றை வரைக்கும் அமெரிக்காவின் மீது, வார்த்தைகளால் வீசிய நாடுகள்தான் உள்ளன. ஏவுகணையால் வீசிய நாடு ஈரான் தான். அதற்கும் ஜனாதிபதி ட்ரம்ப் "நன்றி" என்று புன்முறுவலுடன் கூறினார். இந்தப் புன்சிரிப்பிற்கும் நன்றிக்கும் என்ன அர்த்தம் என்பதை எதிர்காலத்தில் தெரிந்து கொள்ள முடியும் என நினைக்கிறேன்.

எது எப்படி இருப்பினும், டொனால்ட் ட்ரம்பின் தற்போதைய செயற்பாடுகள், அமெரிக்க ஆதிக்கத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதே. ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை நிறுத்தியாகி விட்டது. ஆனால் ஈரானால் செறிவூட்டப்பட்ட 400 கிலோகிராம் யுரேனியம் எங்கே? அது ஈரானுக்கு மட்டுமே தெரியும்.

அந்த 400 கிலோகிராம் யுரேனியத்தை காரணம் காட்டி ஈரானை ஒருவழி செய்யலாம் என்பது அமெரிக்காவிற்கு புரியும். ஆனால் அணுஆயுதம் வைத்திருக்கும் பாகிஸ்தானை ஒரு வழி செய்ய வேண்டும். அதற்குத்தான் பாகிஸ்தான் நீண்டதூர ஏவுகணைத் தயாரிப்பில் இரகசியமாக ஈடுபட்டுள்ளது என்ற செய்தி கிளப்பி விடப்பட்டிருக்கின்றது. இதை காரணம் காட்டி, பாகிஸ்தானின் மீது கைவைக்கும் காலம் நெருங்குகின்றது.

இந்த செயற்பாடுகள் உலக அழிவை நோக்கி நகர்கின்றது. "மனிதர்களிடமிருந்து மனிதர்களை காப்பாற்ற மனிதர்கள் மரணிப்பதா...? ஆகவே இந்த உலகம் ஒன்றுபட்டு, அழிக்கும் அணுவாயுதங்களை அழித்து, ஆக்கத்திற்கான அணுஆயுதங்களை வைத்திருப்பதன் மூலம் மட்டுமே உலகம் சமநிலை பெறும். இல்லையேல் அதிகார மோகம் உலகை அழிக்கும்.

# தெளிவே என் சிந்தனையுள்... 17

ஒரு சிறிய படகில் இரண்டு நண்பர்கள் கடலுக்குச் சென்றனர்.

திடீரென பெரிய புயல் காற்று அடிக்கவே, அவர்களின் படகு திக்குத் திசைமாறி ஆட்கள் அற்ற சிறிய தீவில் கரை ஒதுங்கியது.

வேறு வழியின்றி இரண்டு பேரும் அந்தத் தீவில் இருந்த பழங்களை உண்டு மூன்று நாட்களைக் கழித்து விட்டனர்.

கடற்கரையில் ஒரு விளக்கு கரை ஒதுங்கியதைக் கண்ட இருவரும், அதை எடுத்து சுத்தம் செய்தனர்.

அப்போது அந்த விளக்கில் இருந்து பூதம் ஒன்று வெளியே வந்து "நான் நீண்ட காலமாக இந்த விளக்கினுள் அடைக்கப்பட்டுக் கிடந்தேன். என்னை மீட்டதற்கு நன்றி. உங்களுக்கு இரண்டு வரம் தருகிறேன் கேளுங்கள்?" என்றது.

உடனே ஒருவன் "நான் உடனடியாக எனது வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றான். மறு கணமே அவன் மறைந்துவிட்டான்.

இதைக் கண்ட நண்பனோ, "என் நண்பன் இல்லாமல் என்னால் இங்கே இருக்க முடியாது. உடனடியாக அவன் இங்கு வரவேண்டும்" என்றான்.

அடுத்த கணமே வீட்டுக்குச் சென்ற நண்பன் மீண்டும் தீவுக்கு வந்து விட்டான். பூதம் மறைந்தது.


அன்பானவர்களே! எம்மில் பலரும் இவ்வாறானவர்களே! எவ்விடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எவ்வாறு பேச வேண்டும் எனத் தெரியாமல் நடந்து கொள்வார்கள்.

இது அவர்களையும் அழித்து மற்றவர்களையும் அழித்துவிடும் என்பதை அவர்கள் கொஞ்சமும் சிந்திக்க மாட்டார்கள். தாம் செய்வதே சரி என்பது அவர்களின் மனநிலையாக இருக்கும்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ்.கோட்டை

62

## செங்கை ஆழியான்

ஆயிரக்கணக்கான தொன் குண்டுகள் இம் முயற்சியில் பயன்படுத் தப்பட்டன. புலிகளின் காவலரண்களை இவற்றி னால் எதிர்பார்த்தளவு சேதப்படுத்த முடிய வில்லை. கட்டடங்கள் சிதைந்தன. யாழ்ப்பாண நகரம் இக்குண்டு வீச்சுக் களினால் முற்றாக நாச மாகியது. எந்த ஒரு கட் டடமும் எஞ்சவில்லை அனைத்தும் தகர்ந்து போயின. குருநகர், பாசை யூர், மெயின் றோட் பகு திகள் முற்றாகப் பாதிக் கப்பட்டன.

குருநகரில் எந்த ஒரு கட்டடமும் எஞ்சவில்லை. நகரத்திலிருந்து அரசடி வீதி வரையிலான பகுதிகள் அதி கம் குண்டு வீச்சுக்களுக்குள் ளாகின. ஏராளமான வீடுகள், பாடசாலைகள்.

சந்தைகள், தியேட்டர்கள், கோயில்கள். மசூதிகள், வைத்தியசாலைகள் எதுவும் இக் குண்டு வீச்சுக்களுக்குத் தப்பவில்லை சகடை என அழைக்கப்பட்ட வை-12 விமானம் வீசிய குண்டுகள் பாரிய கட்டடச் சேதத்தைத் தோற்று வித்தது.

அவ்ரோ விமானங்கள் வீசிய பீப்பாக்குண்டுகள். பொம்பர்கள் வீசிய குண்டுகள், ஹெலி மூலம் நிகழ்த்திய றொக்கட் தாக் குதல்களால் நூற்றுக்கண கான மக்கள் உயிரிழந்தனர். வீடுவாசல்களை இழந்து அனா தைகளாகினர். அவயவங் களை இழந்தனர்.

விமானக் குண்டுவீச்சுக்கள் பலவாறிருந்தன. நோபாம் குண்டுகளை ஒத்த குண்டு களும், எரிகுண்டுகளும் வீசப் பட்டன. கண்மூடித்தனமாக வீசப்பட்டன.

ஒரு கட்டத்தில் யாழ்ப் பாணத்தின் பல பகுதிகள் மீதும் மலக்குண்டுகள் வீசப் பட்டன. தம் சார்பான தின சரிப் பத்திரிகைகளையும் விமானங்களிலிருந்து அவர் கள் கட்டுக்கட்டாக வீசினர்.

இறுதி நோத்தில் பொம் பர்களிலிருந்து றொக்கட் தாக்குதல்கள் மேற்கொள் ளப்பட்டன. வீதிகளில் சென்று கொண்டிருந்த எதுவுமறியா அப்பாவி மக்கள் பலர் பலி யாக நேர்ந்தது. விமானக் குண்டு வீச்சினால் நிகழ்ந்த பரிதாபகரமான துயர மரணங்கள் சில குறிப்பிடத்தக்கன .

கொக்குவிலில் விமா னங்கள் நிகழ்த்திய குண்டு வீச்சினால் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த ஏழு பேர் பலியாகினர். அவர்களது அனைத்து சடலங்களும் ஒரே குழியில் இடப்பட்ட போது அக் கிராமமே அழுதது. ஒரே நேரத்தில் பத்து வானூர்திகள் வரை யில் குண்டுகளை வீசியி ருக்கின்றன.

அக்குண்டுவீச்சினால் அம்பலவாணர் வீதியில் இருவர் உடல்கள் சிதறிப் பலியாகினர். யாழ் புகை யிரதச்சந்தியில் குண்டு வீச்சினால் எட்டுப்பேர் உயிரிழந்தனர்.

கிளிநொச்சிக் குடி யேற்ற உத்தியோகத்தர் இ.சதாசிவம் இக்குண்டு வீச்சில் மரணமடைந்தார். யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில் நிகழ்ந்த குண்டு வீச்சில் நிலவளவை யாளர் திருஞானசம்பந் தர் பலியாக நேர்ந்தது.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்




# கடற்புறா

அவன் அப்படிமரக்கலத் தைப் பார்த்து மயங்கி நின் றதற்குக் காரணம் இருக்கிற தென்பதைப் புரிந்துகொண்ட பலவர்மனும், “ஆம் ஆம்! மிகப் பலமான மரக்கலம். என்ன அழகு! எத்தனை கவர்ச்சி!” என்று வாய்விட்டுச் சிலாகித் தான்.

பலவர்மன் சிலாகித்த சொற் கள் காதில் விழுந்த பின்னும் சில நிமிடங்கள் பேசாமலே நின்று கொண்டிருந்த இளைய பல்லவன் கடைசியில் பலவர் மனை நோக்கித் திரும்பி, “ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் பிரதான கோட்டைத் தலை வருக்கு என் மரக்கலம் பிடித்தி ருப்பது பற்றி நான் பெரு மகிழ்ச் சியடைகிறேன்,” என்றான்.

“ஸ்ரீவிஜயத்தின், பிரதான கோட்டை இதுவல்ல,” என்று புன்முறுவலுடன் பதிலுரைத் தான் பலவர்மன்.

“யார் சொன்னது?” என்று வினவினான் இளைய பல்ல வனும் குறுநகை கொண்டு.

“நான்தான் சொல்கிறேன். ஸ்ரீவி ஜய நகரத்தின் துறைமுகத்தை நீங்கள் பார்த்ததில்லை. பார்த்திருந் தால் இதைப் பாராட்டமாட்டீர்கள்” என்றான் பலவர்மன்.

அத்தனை பெரிதா தலைநகரக் கோட்டை? என்று வினவினான் இளையபல்லவன்.

ஆம். அதைவிடப் பலமான கோட்டையோ சிறந்த துறைமுகமோ ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தில் வேறெங் கும் கிடையாது என்ற பலவர்மன் சொற்களில் பெருமையிருந்தது.

“ஆனால் அதன் பலமும் அழகும் பயனற்றதாயிருக்கிறதே!” என்று பெருமூச்சு விட்டான் இளைய பல்ல வன்.

“ஏன்?” வியப்புடன் எழுந்தது பலவர்மன் கேள்வி.

நீங்களே சொல்லியிருக்கிறீர்கள் சூளு இனத்தார் தான் ஸ்ரீவிஜ யத்தின் கடல் பலம் என்று.

ஆம் சொன்னேன், அதுதான் உண்மையும்கூட.

“அந்தச் சூளுக்கள் இந்தத் தீவின் மேற்குப் பகுதியில் வசிக் கிறார்கள். அங்குள்ள துறை முகங்களிலிருந்து அவர்கள் மரக்கலங்கள் ஓடுகின்றன. அவற் றுக்கு ஆதரவாகவும், அவற்றைப் பழுது பார்க்கவும் எதிரிக் கப்பல்கள் அதிகமாக வந்து மறைந்து நிற்க வும் இருப்பது இந்த அக்ஷய முனை தான்.”

“ஆம், ஆம்” ஆகையால் ஸ்ரீவிஜயத்தின் சார்பாக நடத்தப்படும் கடற்போரோ கடற்கொள்ளையோ இந்தத் துறை முகத்திலிருந்துதானே நடக்கிறது. கடற்கொள்ளையென்று அதற்குப் பெயரல்ல, தற் காப்புக்காக நடத்தப் படும் போர்.”

பெயரில் என்ன இருக்கிறது? நடப்பது எதுவாயிருந்தாலும் இங் கிருந்துதானே நடக்கிறது?”

“ஆம்.”

“அத்தனை பாதுகாப்பை நீரில் அளிக்கும் இந்தத் துறைமுகத் தைவிட ஸ்ரீவிஜய நகரத் துறை முகம் எப்படிச் சிறந்ததாகும்?”

இந்தக் கேள்வி ஓரளவு திருப் தியைத் தந்தாலும் பலவர்மன் அதை வெளிக்குக் காட்டாமல், “இருப்பினும் தலைநகரத் துறை முகத்தின் முக்கியத்துவம் இத ற்கு வருமா?” என்று கேட்டான்.

“முக்கியத்துவமென் பதும் அல்லாததும் உபயோகத்தைப் பொறுத்திருக்கிறது. இது அத் தனை முக்கிய மென்று நினைக் காவிட்டால் நான் இங்கு வரு வேனா?” என்று கூறிப் பெரிதாக நகைத்தான் இளையபல்லவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா CINEMA



# முகம் 10; சிலம்பரசன் (சிம்பு)

**1.** அம்மா செல்லம். அம்மாவின் மடியில் தலை வைத்து பத்து நிமிடம் தூங்கினால்தான் அன்றைய நாள் முழுமையடையும். தம்பி, தங்கை கேலி செய்தாலும் அது அப்படித்தான். சாப்பிடும் வேளையில் அம்மா கையால் இரண்டு வாய் ஊட்டிவிட்டால்தான் நிறைவாய் இருக்கும் சிம்புவுக்கு. இப்போது சைவம் தான். அம்மா வைக்கின்ற கீரைப் பொரியல் சாதம், ரசத்திற்கு சிம்பு அடிமை.

**2.** இளையராஜா இசையில் அதிகம் கரைவார். திரையிசையில் பரீட்சயம் இருப்பதால் யாராலும் தொடமுடியாத இடத்தில் ராஜாவை வைத்திருப்பதாகச் சொல்வார். அப்பாவின் பாடல்களைச் சேமித்து வைத்திருக்கிறார். "அப்பாவின் பாடல்களைக் கேட்டால் செம வைப் ஆகிவிடும்" என்பார்.

**3.** பிடித்த நடிகர்களுக்கான பட்டியல் நீண்டதாக இருக்கிறது. ஆனாலும் உச்சபட்சமாக பிடித்த நடிகர் அப்பா டி.ராஜேந்தர்தான். அப்பா மீது பெரும் பிரியம் வைத்திருக்கிறார்.

**4.** பிடித்த நிறங்கள் கறுப்பு, வெள்ளை மற்றும் நீலம். இருக்கும் இடங்களில், போடும் உடைகளில் இந்த நிறங்களே அதிகம் அங்கம் வகிக்கும். செல்லமாக "டான்" என்ற பெயர் சூட்டி ஒரு நாய்க் குட்டியை வளர்த்தார். சமீபத்தில் அது இறந்துவிட்டதால் சிம்பு அப்செட். "இனி செல்லப் பிராணிகளை வளர்க்க வேண்டாம்" எனத் தீர்மானித்துவிட்டார்.

**5.** நண்பர்கள் குறைவு. அதிகம் விரும்புவது அம்மாவோடு நேரம் செலவிடுவதை. நீண்டகால நண்பர்கள் அரிதாகவே இருப்பார்கள். கேட்டால் "நிரந்தர நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை" என்பார்.

**6.** தங்கை இலக்கியா மீது அலாதிப் பிரியம். தங்கையைப் பார்க்க வேண்டும் என்று தோன்றிவிட்டால் அடுத்த கணமே ஹைதராபாத் பிளைட்டைப் பிடித்துவிடுவார். இலக்கியாவின் மகன் ஜேசன் தான் சிம்புவுக்கு விளையாட்டுத் தோழன்.

**7.** தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் சிம்பு நடிக்க இருக்கும் படத்தைத் தனது கனவுப்படமாகக் கருதுகிறார். அதற்காக பல மாதங்களாக நீளமாக முடி வளர்க்கிறார். தினமும் இரண்டு வேளை குளித்து அதைப் பக்குவமாகப் பராமரிக்கிறார். "இப்படி நீளமாக முடி வளர்க்க ஆரம்பித்த பிறகு பெண்கள்மீது மிகப்பெரிய மரியாதை வந்திருக்கிறது" என்கிறார்.

**8.** இப்பொழுதெல்லாம் சிம்பு அடிக்கடி முணுமுணுக்கிற பாடல் அசல் கோலார் எழுதிப் பாடிய, "யார்றா இந்தப் பையன், நான் தான் அந்தப் பையன்!" பாட்டுதான். ரொம்பவும் ரசித்துக் கூடவே பாடுவதை வீட்டுப்பக்கம் கேட்கலாம்.

**9.** நிறைய கார்கள் அணிவகுத்தாலும் பிடித்தது மினி கூப்பர். மிகவும் விருப்பத்தோடு பயணிப்பதும் மினி கூப்பரில்தான். அம்மா பரிசளித்தது என்றால் சொல்லவா வேண்டும்..? விதவிதமான வாட்ச் அணிந்து கொள்வதில் சிம்புவிற்கு ஆர்வம் அதிகம். விக்ரமிற்கு அடுத்தபடியாக இப்போது ஃபேஷன் உடைகளை சிறப்பாகத் தேர்ந்தெடுத்து அணிவது சிம்பு தான்.

**10.** நினைவு தெரிந்த நாளிலிருந்து டைரி எழுதி அதை பாதுகாத்தும் வருகிறார். ஆரம்பத்தில் இருந்தே அந்தப் பழக்கம் கைவந்திருக்கிறது. (அதில் ஒரு டைரியாவது படிக்கக் கிடைக்குமா சிம்பு?)



பா.இரஞ்சித் இயக்கத்தில் "வேட்டுவம்" மிகுந்த வேகத்தில் படமாகி வருகிறது. அட்டகத்தி தினேஷ், ஆர்யா இருவரும் போட்டி போட்டு நடிப்பதை யூனிட்டில் எல்லோரும் ஆச்சர்யப்பட்டுப் பார்க்கிறார்களாம். தினேஷூக்கு சோபிதா துலிபாலா ஜோடியாக நடிக்கிறார் என்பதுதான் ஹைலைட். இரஞ்சித் தன் நீலம் வேலைகளைக் கொஞ்சம் ஒத்தி வைத்துவிட்டு, "வேட்டுவம்" படத்தில் தீவிரமாக இறங்கிவிட்டார். இந்த வருடத்திற்குள்ளாக வேட்டுவத்தை எதிர்பார்க்கலாம்.



நான்கு படங்களில் தொடர்ந்து பிஸியாக ரவி மோகன் நடித்துவந்தாலும், யோகிபாபுவை வைத்து, தான் இயக்க உள்ள படத்தின் ஸ்கிரிப்ட்டை மெருகேற்றிக்கொண்டே இருக்கிறார். நேரம் கிடைத்தால் யோகிபாபுவும் கதை விவாதத்தில் கலந்து கொள்கிறார். அவரது ஆர்வத்தைக் கண்டு மகிழ்ச்சியில் இருக்கிறார் ரவி மோகன்.



சூர்யா பிறந்தநாளை முன்னிட்டு "அயன்" படத்தின் தெலுங்கு வெர்ஷனான 'Veedokkade'வை 4கே தொழில்நுட்பத்தில் ஆந்திரா, தெலங்கானாவில் ரீ-ரிலீஸ் செய்கின்றனர். தமிழில் தாணு தயாரித்த "காக்க காக்க" படத்தையும் ரீ-ரிலீஸ் செய்யத் திட்டமிட்டு வருகிறார்கள்



சிம்பு, வெற்றிமாறனுக்கு நிறைய கால்ஷீட் கொடுத்திருக்கிறார். மீண்டும் கேட்டால், எத்தனை நாட்களுக்கும் கொடுக்கத் தயாராக இருக்கிறார். புதிய படத்திற்காக நடத்திய டெஸ்ட் ஷூட் வெற்றி மாறனுக்குப் பெரும் திருப்தியைத் தந்திருக்கிறதாம்.



வெங்கட் பிரபு தன் ஸ்கிரிப்ட்டை இறுதி செய்யும் பணியில் தீவிரமாக இருக்கிறார். சிவகார்த்திகேயன் சில சிறு மாறுதல்களைச் செய்யச் சொல்லி இருப்பதால் அதற்கான வேலையில் ஆழ்ந்து இருக்கிறார். அநேகமாக அது டைம் டிராவல் கதையாக இருக்கும் என்கிறார்கள்.



குஷ்பு வீட்டிலிருந்து ஒரு ஹீரோயின் ரெடி. சுந்தர்.சி, குஷ்புவின் இளைய மகள் அனந்திதா சினிமாவில் நடிகையாக நுழைய முழுதாகத் தயாராகி விட்டார். விரைவில் அதிகாரபூர்வமான அறிவிப்பை எதிர் பார்க்கலாம்.



ஓவியா புதுச்சேரியில்தான் அடிக்கடி தென்படுகிறார். நண்பர்கள் பட்டாளத்தோடு புதுச்சேரி கடற்கரைகளில் அவரைக் காணலாம். நிறைய விளம்பரப் படங்களில் கவனம் செலுத்தும் ஓவியாவிற்கு புதுச்சேரியில் ரசிகர் கூட்டம் எக்கச்சக்கமாம். முகம் சுளிக்காமல் எல்லோருடனும் செல்பி எடுத்துக் கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

452

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மாரடைப்பு

நமது உடலில் ஓய்வில்லாமல் கடிகாரம் போல் இயங்கும் உறுப்புக்களில் இதயமும் ஒன்று. இவ் இதயத்தைத் தாக்கும் மாரடைப்பானது (Heart Attack) உயிரைப் பறிக்கக் கூடிய அபாயகரமான நோயாகும். இவ் ஆக்கத்தில் நாம் மாரடைப்பு ஏன் ஏற்படுகின்றது? மாரடைப்பிற்கான அறிகுறிகள், சிகிச்சைமுறைகள் மாரடைப்பின் பின் வாழ்க்கை முறையில் ஏற்படுத்தவேண்டிய மாற்றங்கள் பற்றி சுருக்கமாக ஆராயவுள்ளோம்.

### மாரடைப்பு என்றால் என்ன?


இதயத்தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதியை முடியுரு நாடிகள் வழங்குகின்றன. முடியுரு நாடிகள் ஏற்படும் கொழுப்புப் படிவுகளாலும் அக்கொழுப்புப் படிவுகளில் ஏற்படும் வெடிப்புகளில் குருதிக்கட்டிகள் படிவதாலும் முடியுரு நாடிக்குழாய்கள் முற்றாக அடைக்கப்படும் போது இதயத் தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதி இல்லாது போகிறது. இதனால் இதயத்தசை இறப்படைகின்றது. இதுவே மாரடைப்பு ஆகும்.

இதன்போது இதயத்துடிப்பின் போது சுருங்கி விரியும் செயற்பாடு பாதிப்படைகின்றது. இதயத் தசையின் இறப்படையும் பகுதியின் அளவு கூடும் போது இதயத் தொழிற்பாடு குறைவடைந்து இதயப் பலவீனம் ஏற்படுகின்றது இதனால் இறப்பும் ஏற்படலாம்.

### மாரடைப்புக்கான அறிகுறிகள் என்ன?

- இடதுபக்க அல்லது நடுநெஞ்சில் ஏற்படும் இறுக்கிப்பிடிப்பது போன்ற நெஞ்சுவலி.
- நெஞ்சுவலியுடன் தாடைகள் இறுகுதல் அல்லது தோற்பட்டையில் ஏற்படும் நோ.
- நெஞ்சுவலியுடன் வியர்த்தல், வாந்தி எடுத்தல் மூச்சு விடச்சிரமம், தலைசுற்றுதல்.மயக்கம் நெஞ்சு படபடப்பு போன்றன ஏற்படல்.
- நடந்துசெல்லும் போது அல்லது பாரமான வேலை செய்யும் போது திடீரென ஏற்படும் நெஞ்சுநோ.
- நடுநெஞ்சில் ஏற்படும் எரிவு அல்லது மேல் வயிற்று நோ. இது வயிற்றுக் கோளாற்றுடன் சம்பந்தமானதாக இருக்கலாம் என அநேகமான நோயாளிகள் புறக்கணிப்பதுண்டு.

மேற்கூறிய அறிகுறிகளின்றியும் மாரடைப்பு ஏற்படலாம் இது (Silent myocardial infarction) பொதுவாக நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும். அதைவிட சில நோயாளிகள் நெஞ்சுப்பகுதியில் ஏற்படும் தசை நோவைத் தவறாக மாரடைப்பு என்று எண்ணி வைத்தியர் உதவியை நாடுவதும் உண்டு.



### மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கும் காரணங்கள் எவை?

மாரடைப்புக்கான சரியான காரணங்களைத் தெளிவாக அறிந்து கொள்வதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தைக் குறைக்கலாம்.

இக்காரணங்கள் இருவகையானவை

1) மாற்ற முடியாத காரணங்கள்.

அதாவது இவை இயற்கையான காரணங்கள். இவை பற்றி நாம் தெரிந்து கொண்டாலும் கூட மாரடைப்பு ஏற்டுவதை எம்மால் தவிர்க்கமுடியாது.

ஆண்கள்

வயதானவர்கள் (65 வயது)

இதய நோயால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்டவர்கள் இவர்களுக்கு சாதாரணமான ஒருவரைவிட மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

2) மாற்றக்கூடிய காரணங்கள்

இவற்றை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

நீரிழிவுநோய் இவர்களுக்கு மற்றவர்களுடன் ஒப்பிடும் போது மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம்.

இவர்கள் மருந்துகளைச் சரியான அளவில் ஒழுங்காகப் பாவிப்பதாலும் உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதாலும் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

அதிகரித்த கொழுப்பின் அளவு இரத்தத்தின் கொழுப்பின் அளவு மரபு வழியாகவும் உணவுப்பழக்கங்களில் கவனம் செலுத்தாமையினாலும் தைரொயிட், சிறுநீரகக் கோளாறுகள் போன்ற நோய்களாலும் மதுப்பழக்கத்தாலும் அதிகரிக்கின்றது.

இதனால் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கின்றது. அதிகரித்த கொழுப்பின் அளவு உள்ளவர்கள் சரியான உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சி மருந்துகள் உட்கொள்வதன் மூலம் மாரடைப்பைக் குறைக்கலாம்.

அதிகரித்த இரத்த அழுத்தம்:- சரியான மருந்துகள் உட்கொள்ளல், உடற்பயிற்சி, உணவுக்கட்டுப்பாட்டு, புகைத்தல் மற்றும் மதுப்பாவனையை நிறுத்துதல் மூலம் அதிகரித்த இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டாக வைத்திருந்து மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

அளவுக்கதிகமான மதுபாவனை, புகைப்பிடித்தல் சாதாரண ஒருவரைவிட இவர்களுக்கு இரத்த அழுத்தம் இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம். புகைத்தல், மதுபாவனையை நிறுத்துதல் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

மன அழுத்தம் :- மன அழுத்தம் உள்ளவர்கள் தியானம், மூச்சுப்பயிற்சி உள்ளிட்ட யோகாப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

அதிக உடற்பருமன்:- எப்போதும் உடல் எடையைக் குறைத்து வைத்திருப்பது மாரடைப்பு மட்டுமல்லாது வேறு உடல் நலப் பிரச்சினைகளில் இருந்தும் நம்மைக் காப்பாற்றும்.

இதனால் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமக்கு நீரிழிவு அதிகரித்த இரத்த அழுத்தம், அதிகரித்த கொழுப்பு உள்ளதா என ஆண்டுதோறும் பரிசோதித்துப் பார்ப்பதன் மூலம் கண்டறியப்படாத நோய்களினால் ஏற்படும் மாரடைப்பு வீதத்தைக் குறைக்கலாம்.

(தொடரும்...)

P.லக்ஷ்மன்,
வைத்திய கலாநிதி,
இருதய வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தால், அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பில் தரமற்ற உணவுப் பொருட்கள் அழிப்பு!

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு தேவிபுரம் உடையார்கட்டு பகுதியில் சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் திடீர் சோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனை நடவடிக்கையுடன் டெங்கு ஒழிப்பு தொடர்பான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த சோதனை நடவடிக்கையில் வண்டு மொய்த்த பொருட்களும் கைப்பற்றப்பட்டதோடு உரிமையாளர்களின் அனுமதியோடு குறித்த பொருட்கள் அழிக்கப்பட்டது.

அத்துடன் டெங்கு தொடர்பான பொலித்தீன் பாவனைக் குட்பட்ட வர்த்தகர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த நபர்களிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (8-299)

## சாவகச்சேரி
## உப்புக்கேணிக்குளம் விரைவில் புனரமைக்கப்படும்
### நகரசபை தவிசாளர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் அமைந்துள்ள உப்புக்கேணிக் குளத்தின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் நகரசபையின் புதிய தவிசாளர், உப தவிசாளர் மற்றும் செயலாளருடன் கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கடந்த 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

கடந்த மாரி காலத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக உப்புக்கேணிக் குளத்தினைச் சூழவுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் தமக்கு நிரந்தர தீர்வு வேண்டும் எனக் கோரி ஆளுநர், அரசாங்க அதிபர், சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச செயலகத்தை அணுகியிருந்தனர்.

இந்நிலையில் பொதுமக்களின் வேண்டுகோள் மற்றும் அரச அதிகாரிகளின் பணிப்பிற்கு அமைவாக சாவகச்சேரி நகரசபை தனது 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் உப்புக்கேணிக் குளத்தின் மேலதிக நீரை கடத்துவதற்கான வடிகால் அமைக்க 7 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்திருந்தது.

அதன் அடிப்படையிலேயே மாரி காலத்திற்கு முன்னர் மேற்படி நிதியை முறையாக குளப் புனரமைப்பு அல்லது வடிகாலமைப்புச் செயற்பாட்டிற்கு பயன்படுத்துமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் த.சுபேசன் மற்றும் செயலாளர் க.தர்ஷன் ஆகியோர் வலியுறுத்தியிருந்தனர்.

இதன்போது உப்புக்கேணி குள புனரமைப்புப் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என நகரசபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ் உறுதியளித்திருந்தார். (8-30)



சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டில் பாடசாலை மட்டங்களில் நடத்தப்பட்ட மனித உரிமை தொடர்பான கட்டுரை போட்டி மற்றும் பட்டிமன்ற போட்டிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி யாழ்.கனகரெட்ணம் மகா வித்தியாலய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
### பெறுகை அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/ Imp/25/ 1111-13 | Construction of Canteen at Divisional Secretariat, Kandawalai, | 100 நாட்கள் | 8.11 மில்லியன் | C8 or above, Building | ரூபா. 123,000/- 03.11..2025 வரை | 2500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றினுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப் படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:- 021228 5663, பக்ஸ் இல:-021 228 3966)
3. கேள்வி ஆவணங்களை 07.07.2025ஆம் திகதியிலிருந்து 18.07.2025ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப் பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 16.07.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 21.07.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சு.முரளிதரன்**
**திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-3338)

## பகிரங்க ஏல விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கான வதிவிடத்தின் (பழைய பூங்கா) சுற்றாடலில் காணப்படும் விழுந்த நிலையிலுள்ள இரண்டு மலை வேம்பு மரங்கள், ஒரு மருத மரம் (பட்ட நிலையில்) மற்றும், அங்கு காணப்படும் கற்கள் என்பன 2025.07.15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இவ் ஏல விற்பனையில் மேற்படி பொருட்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வார காலத்தினுள் அவற்றை பழைய பூங்கா வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். மேற்படி மரங்கள் மற்றும் கற்கள் என்பவற்றை பார்வையிட விரும்புபவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தருடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**ம.பிரதீபன்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்**


(சி-3339)


## ராஜ் ஜுவல்லர்ஸ்

நகை அடகுபிடிக்கும் சேவை

வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது

1 பவுண் 22 கரட்டிற்கு



2,20,000/=

அடகுக்காலம் ஒருவருடம்

இல.59, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்

021 221 7287 / 076636 1238

(4634)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஆசிய பசுபிக் பிராந்தியத்தின்

# ஆரோக்கியமான பாடசாலையாக யாழ்.இந்துக்கல்லூரி தெரிவு



(யாழ்ப்பாணம்)

ஆசிய-பசுபிக் பிராந்தியத்திற்கான ஆரோக்கியமான பாடசாலைக்கான விருதினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பங்கேற்ற 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளில், *Active Lifestyle* பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான விருது வழங்கும் விழா கடந்த ஜூலை 3, 2025 அன்று வியட்நாமின் டனாங்கில் உள்ள *Pullman Beach Resort* இல் நடைபெற்றது.

முன்னதாக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இலங்கையின் ஆரோக்கியமான பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு ஆசிய-பசிபிக் பிராந்தியப் போட்டியில் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இலங்கைக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த ஜூன் மாதம் 24 ஆம் திகதி *Cinnamon Lakeside Hotel* இல் நடைபெற்றது.

இதன்மூலம் பாடசாலைக்கு 3.5 மில்லியன் ரூபாய் பரிசுத்தொகையாக கிடைக்கப்பெற்றது. (க-8-33)

# அக்கராய மன்னனின் நினைவு நாள்



(தருமபுரம்)

13 ஆம் நூற்றாண்டில் பொலநறுவை இராச்சியத்திற்குப் பிறகு, வன்னிப் பகுதி தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டது. மன்னர் அக்கராயன் அவர்களில் ஒருவர்.

அவர் அக்கராயன் பிரதேசத்தை ஆண்டதாக தெரிவித்து கரைச்சி பிரதேச சபையினால் அக்கராயன் சந்தியில் 2018.07.05 சிலை நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் சிலை வைக்கப்பட்ட தினத்தில் நினைவு நாள் கொண்டாடப்படுவது வழமை.

அந்த வகையில் நேற்றைய தினம் நினைவு தின நிகழ்வு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

இந் நினைவு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்பு சார்ந்தோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (8-316)

### தூத்துக்குடி திருச்செந்தூரில்

# பூஜை வழிபாடுகளில் தமிழுக்கு முக்கியத்துவம்

தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6.15 மணி முதல் 6.50 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் யாகசாலை பூஜை வழிபாடுகள் கடந்த 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

பூஜைகளில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

குறிப்பாக யாகசாலை பூஜைகளில் மந்திரங்கள் ஓதுவது, திருமுறைகள் மற்றும் திருப்புகழ் பாடல்கள் பாடுவது போன்றன தமிழ் மொழியில் நடத்தப்படுகிறது. இது தவிர 64 ஓதுவார்கள் பூஜை போன்ற நிகழ்வுகளும் தமிழ் மொழியில் நடத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-3)




வேள்ட் விஷன் லங்கா நிறுவனமானது சங்கானை பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் இணைந்து நடாத்திய "பசியை போக்குவோம்" எனும் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனியும் போசணைக் கண்காட்சியும் நேற்றைய தினம் நடைபெற்றது.

நடை பவனியானது சங்கானை பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆரம்பித்து சங்கானை கலாசார மண்டபத்தை சென்றடைந்தது. அங்கு விருந்தினர்களால் போசணைக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து போசணை பற்றிய விழிப்புணர்வு பொம்மலாட்டம் இடம்பெற்றது.




ஈழத்து சித்தர் கீரிமலையில் சமாதி கொண்டு உறையும் அருளம்பல சுவாமிகளின் 100 ஆவது குருபூசை தினம் கடந்த 03.07.2025 வியாழக்கிழமை சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் சுவாமிகளின் நூல் வெளியீடும் அதனைத் தொடர்ந்து சுவாமிகளின் நினைவு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்று 100 மரக்கன்றுகள் சித்தர் பீடத்தில் நடுகை என்பனவும் இடம்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனங்கிளப்பில் மீண்டும் உப்பளம்


# நிலத்தடி நீருக்கு ஆபத்து!



## தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

**(சாவகச்சேரி) ..........**

**சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்கு உட்பட்ட தனங்கிளப்பு அறுகுவெளி பகுதியில் மீண்டும் உப்பளம் அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அது தென்மராட்சிப் பிரதேசத்தின் நிலத்தடி நீரை பாதிக்கக்கூடும். எனவே அதனை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தனங்கிளப்பு-அறுகுவெளிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இருந்த உப்பளம் மீண்டும் திடீரென இயங்கு நிலைக்கு வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த உப்பளத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அறிந்த சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் சாவகச்சேரி நகர சபை உபதவிசாளர் கிஷோர் ஆகியோர் உப்பளத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்திருந்தனர்.

இதன்போது ஆழ்துளை குழாய் கிணறுகள் மூலம் உப்பு உற்பத்தி பாத்திகளுக்கு நீர் இறைப்பதனை கண்டுபிடிக்கப்பட்டது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள சுமார் 5 குழாய் கிணறுகளில் நீர் எடுக்கப்பட்டு வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு உப்பளம் அமைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியும் பெறப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

அறுகுவெளி கடல் நீரேரியில் இருந்தே உப்பு உற்பத்திக்கான நீர் எடுக்க வேண்டிய நிலையில் அதற்கான ஏற்பாடுகள் எதனையும் செய்யாமல் சட்டவிரோத குழாய்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் தென்மராட்சியின் நிலத்தடி நீர் வளம் பாதிக்கக்கூடிய அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளதால் உரிய அதிகாரிகள் இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு உபதவிசாளர் ஞா.கிஷோர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-30)

## கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டது வாகனம்



(அராலி)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் உடுப்பிட்டி புறாப்பொறுக்கி பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த கனரக வாகனமொன்று நேற்று காலை தடம்புரண்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கற்கோவளம் பகுதியிலிருந்து வீதி புனரமைப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்ட ரோலர் வாகனத்தை ஏற்றிக்கொண்டு சென்ற கனரக வாகனமே புறாப்பொறுக்கி பகுதியில் தடம் புரண்டுள்ளது.

முன்னால் துவிச்சக்கர வண்டியொன்றில் சென்றவர் கட்டுப்பாட்டை இழந்து குறித்த கனரக வாகனத்துடன் விபத்தை ஏற்படுத்த விருந்த நிலையில் அதனை தடுக்க முற்பட்ட வேளையே குறித்த வாகனம் தடம் புரண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104-60)

## சிவகுரு ஆதீனத்தில் ஆலோசனை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மகோற்சவ காலங்களில் சிவகுரு ஆதீன விசேட பணித் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ஆதீனத்தில் நடைபெறவுள்ளது என வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இம்முறை முதல் தடவையாக 25 நாட்களும் அன்னதானம், பஜனை, அருளுரை என்பனவும் நடைபெறவுள்ளதாக தெரிவித்தார். (8)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் மிகப் பிரமாண்டமாக அமையப் பெற்றுள்ள ஸ்ரீ வாலையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை பூர்வபக்ஷ துவாதசி திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9 மணிமுதல் 10.20 மணி வரையுள்ள சிம்ம லக்ன சுப முகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை அனுஷ நட்சத்திரமும் துவாதசி திதியும் சித்தயோகமும் கூடிய காலை 6 மணிமுதல் 6.45 மணி வரையுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எண்ணெய்க் காப்பு சாத்தும் அடியார்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை சாத்த முடியுமென ஆலய தர்மகர்த்த சபையினர் தெரிவித்துள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

ஈவினை அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை துவாதசி திதியும் அனுஷ நட்சத்திரமும் சிம்ம லக்கினமும் அமைந்த காலை 9.01 மணி தொடக்கம் 10.29 மணிவரையான சுப முகூர்த்த சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எண்ணெய்க்காப்பு சாத்தும் அடியவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை சாத்த முடியுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 600 | 600 | 500 |
| தக்காளி | 180 | 200 | 300 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 250 |
| கோவா | 250 | 400 | 400 | 280 | 400 |
| கரட் | 400 | 350 | 400 | 380 | 500 |
| பூசணி | 120 | 140 | 160 | 120 | 200 |
| புடோல் | 120 | 100 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 130 | 120 | 150 |
| பாகற்காய் | 550 | 600 | 600 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 350 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 260 | 400 |
| பீற்றூட் | 200 | 200 | 300 | 220 | 250 |
| கறிமிளகாய் | 600 | 600 | 1000 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 1000 | 400 | 800 |
| போஞ்சி | 600 | 500 | 800 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 150 | 80-150 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 400 | 400 | 500 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 75 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 200 | 150 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

அன்னை மடியில் 10 . 05 . 1998



இறைவன் அடியில் 07 . 07 . 2016

## அமரர் மகேந்திரராசா மதுசன்

காலன் உன்னை இடை நடுவே அழைத்ததடா....
காலமும் எங்களிடம் மன்னிப்புக் கேட்டதடா...
பாலகன் நீ என்றதால்....
மீண்டும் ஒரு ஜென்மம்...
நீ மலர்வாய் எங்களிடம் ஒரு உயிராய்....
என இறைவனை வேண்டுகின்றோம்.

நாளை (07.07.2025) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(4732)

இத்தாவில்,
பளை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அம்மா, அப்பா,
பெரிய அக்கா, சின்னக்கா,
அத்தான், அண்ணா, தம்பி

# அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் கிண்ணத்தை கைப்பற்றியது புங்குடுதீவு நசரேத் அணி




அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் விளையாட்டு கழகத்தினர் தீவக ரீதியாக ஆடவர் மற்றும் மகளிருக்கான உதைபந்தாட்ட தொடரினை முன்னெடுத்திருந்தனர்.

இதில் மகளிருக்கான உதைபந்தாட்ட தொடரில் புங்குடுதீவு நசரேத் அணி மற்றும் புங்குடுதீவு பாரதி விளையாட்டு கழகங்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்த நிலையில் கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி விளையாட்டு கழகத்தின் மகளிர் அணியை 2-0 என்ற கோல்கள் அடிப்படையில் தோற்கடித்து புங்குடுதீவு நசரேத் மகளிர் உதைபந்தாட்ட அணி வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கி கொண்டது.

யாழ்.மாவட்டத்தின் மேலதிக மாவட்ட செயலாளர் கே.சிவகரன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-30)


## நாகபூஷணி திருமண சேவை




உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்.)
077 138 7596, 071 999 9306

(4730)


# மரண அறிவித்தல்

## கந்தையா கனகலிங்கம்
## (அப்பு ராசா)



தாய் மடியில் 10.04.1940 அரண் அடியில் 03.07.2025

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகலிங்கம் அவர்கள் கடந்த (03.07.2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சறோஜினிதேவி (தேவிஅக்கா) அவர்களின் அன்புக் கணவரும் கிருஸ்ணவேணி (கனடா), கஜன் (அவுஸ்திரேலியா), நந்தகோபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகன் (கனடா), அமலா (அவுஸ்திரேலியா), தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வைஸ்ணவி, பைரவி, ஹம்சலி, அபிரா, அனிகா, காதரியன், நகேதா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், பரமேஸ்வரி, பரமலிங்கம், இராசலிங்கம், சின்னத்துரை மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அமரர் இராசகுலசிங்கம், கமலாதேவி, ஜெயவீரசிங்கம், பரராஜசிங்கம், சாந்தாதேவி, தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (05.07.2025) சனிக்கிழமை மாலை 2:30 மணி தொடக்கம் 6:30மணி வரையும் இன்று(06.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணி தொடக்கம் 6.30 மணி வரையும் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, Ontario வில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து இறுதிக்கிரியை நடைபெற்று தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிருஸ்ணவேணி (மகள்) - 905 767 5158
நந்தகோபன் (மகன்) - 647 574 4500
கஜன் (மகன்) - 614 310 410 50
பரா (மைத்துனர்) - 416 788 5265
தனபால் (மைத்துனர்) - 416 457 6855


தகவல் :
இராசலிங்கம்
(சின்னன்னா)
குடும்பத்தினர்

வட்டுவினி,
இணுவில் மேற்கு.

(1298)

# மரண அறிவித்தல்

## வாதவூர் அருட்செல்வம்
## (உரிமையாளர் - N.S.P.Stores, Colombo-11)



மண்ணுலகில் 30.04.1948 விண்ணுலகில் 05.07.2025

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வாதவூர் அருட்செல்வம் அவர்கள் நேற்று (05.07.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாதவூர் - அன்னம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் அனுஷா, காலஞ்சென்ற பிரசன்னா, உதயணன், யாழினி, சிவகஜன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுரேந்திரன், சயந்தி, யாழினி, யூட்பிரணவன், வானுஜி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரவீன், சஜீவன், பிரணவ் அருள், சிவாணா, சரணா, அஞ்சனா, வசந்த், ஸ்ரீவர்மன், ஸ்ரீவளவன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அருணகிரி, செல்வநாயகம், மகாலட்சுமி, இராஜலட்சுமி, திருச்செல்வம், தவச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, திலகவதி, பாலாம்பிகை, இராஜலிங்கம், இராஜதுரை மற்றும் தவமணி, புஸ்பகாந்தி, காலஞ்சென்றவர்களான சபாநாயகம் செல்வநாயகம், இராமச்சந்திரன், வரலட்சுமி மற்றும் புஸ்பவதி, வரதராஜா ஆகியோரின் அன்புச் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது கொழும்பு இல்லத்தில் நாளை (07.07.2025) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

51,Collingwood Place,
Colombo 6.

தகவல் : சிவகஜன் (மகன்)
077 394 6856

(C-3341)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிய முடிதல் வேண்டும்
நல்லவை எண்ணல் வேண்டும்.
– பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தற்துணிவான நடவடிக்கைகளை வடக்கின் ஆளுநர் எடுக்க வேண்டும்

கம்பர் இயற்றிய கம்பராமாயணம், யுகம் கடந்து இன்னமும் நின்று நிலைப்பதற்கு கம்பர் தந்த தமிழ்ச் சுவை மட்டும் காரணம் அல்ல.

மாறாக, கம்பனின் அபரிதமான துணிவும் காரணம் என்பது இங்கு உணர்தற்குரியது.

ஆம், கம்பராமாயணத்தைத் தந்த கம்பர் பெருமான், மூலநூலாகிய வால்மீகி இராமாயணத்தை எங்கள் தமிழ்ப் பண்பாட்டுக்கும் தமிழ் மொழியின் பண்புடைமைக்கும் ஏற்ப மாற்றியமைக்கின்றார்.

இங்குதான் கம்பனின் துணிவு பளிச்சிடுகிறது. இதையும் கடந்து, சோழ மன்னனைப் பார்த்து; மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ! என்று கேட்கின்ற வீரம் கம்பனிடம் இருந்ததாலேயே கம்பனும் கம்பராமாயணமும் இன்னமும் உயிர்ப்போடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

இதை நாம் இங்கு கூறுவதற்குக் காரணம் சில காரியங்களை துணிவோடு செய்தே ஆக வேண்டும்.

ஆம், துரியோதனனை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதாக இருந்தால், குருசேத்திரப் போரை நடத்தியே ஆக வேண்டும்.

ஆக, சிலவற்றை அமுலாக்க வேண்டுமாயின், அதைச் செய்வதுதான் தர்மம்.

அந்த வகையில் வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் சில விடயங்களில் தற்துணிவோடு தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

அதைச் செய்யாவிட்டால், அதனால் பொது மக்களே பாதிப்படைவர்.

ஆம், வடக்கு மாகாணத்தின் ஆளுநர் என்பது இந்த மாகாணத்தின் அதிசுவடிய அதிகாரத்தைக் கொண்ட பதவியாகும்.

எனினும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய இடத்தில் அதைப் பயன்படுத்துவது கட்டாயமானது.

உதாரணத்துக்கு குடிநீர்க் குழாய்களைப் பொருத்துவதற்காக காப்பற் வீதிகள் வெட்டப்படுகின்றன.

எனினும் வெட்டப்பட்ட வீதிகள் முறையாகச் செப்பனிடப்படவில்லை.

இதை நீங்கள் அவதானிக்க வேண்டுமாயின், யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்குச் சென்றால் நிலைமை என்ன என்பது தெரிய வரும்.

இதற்கும் மேலாக, குடிநீர்க்குழாய் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட இணைப்பு வீதிகள் வெறும் சல்லி கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.

இதனால் மோட்டார் சைக்கிள்கள் குறித்த சல்லிக்கல்லில் சறுக்கி விழுந்து விபத்துக்குள்ளாகின்றன.

இங்குதான் வடக்கின் ஆளுநர் நிலைமைகளை நேரில் சென்று அவதானிப்பதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விளக்கம் கேட்பதும் அவற்றைச் சரியான முறையில் மீளச் செப்பனிடுவதற்கு உத்தரவிடுவதும் அவசியமாகின்றது.

ஆம், இதைச் செய்யாதவரை காப்பற் வீதிகள் கண்டபாட்டில் வெட்டப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

### ஜூலை சிறைப்படுகொலை தினத்தில்

# 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் எம்மவர் விடுதலைக்காய் குரல் கொடுப்போம் வாரீர்

## அழைக்கிறது குரலற்றவர்களின் குரல் அமைப்பு

ஜூலை கலவர சிறைப் படுகொலை இடம் பெற்ற ஜூலை 25ம் திகதி சிறைகளுக்குள் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூர்ந்து சிறையிலிருந்து விடுவிக்கப்படாத உறவுகளின் விடுதலை வேண்டி அணிதிரள்வோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்தது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் அழைப்பு விடுத்தார். மேலும் தெரிவிக்கையில்,

அரசினது இரும்புச் சிறைகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிர் பறிக்கப்பட்ட எமது உறவுகளான தமிழ் அரசியல் கைதிகளை உணர்வுபூர்வமாய் மனங்கொள்ள வேண்டியது தமிழ் மக்களாகிய நம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

சுதந்திர வாழ்வின் உரிமைக்காக நித்தமும் போராடிக் கொண்டிருக்கின்ற எமது தமிழினத்தை சட்டத்தின் பெயரால் அடக்கி ஒடுக்குவதற்கென்று ஆதிக்க அரசினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அவசர காலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் இனவிடுதலையின் பெயரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நாம் மறந்து விடலாகாது.

நாட்டின் பலவேறு சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெவ்வேறு காலப்பகுதிகளில் மனிதாபிமானமின்றி கொல்லப்பட்ட நூற்றுக் கணக்கான எமது உறவுகளை நினைவேந்துவதுடன்,

30 ஆண்டுகள் கடந்தும் விடுதலை இன்றி இன்றுவரை சிறைக் கூடங்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் சுதந்திர விடியலுக்காக கரம் கோர்த்து குரலுயர்த்த அனைவரும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

தமிழினத்தை வேரறுக்கும் வரலாற்றின் முதல் அத்தியாயமான ஜூலைக் கலவரத்தின் சிறைப்படுகொலை நாளான ஜூலை 25ம் திகதியை முன்னிறுத்தி,

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான உணர்வுபூர்வமான போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க குரலற்றவர்களின் குரல் அமைப்பு சகல தமிழ் சமூகங்களிடமும் அழைப்பு விடுக்கின்றது.

எதிர்வருகின்ற 24 மற்றும் 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கிட்டு பூங்கா (சங்கிலியன் பூங்கா) சுற்றயலில் இடம்பெறும் இந்த நினைவேந்தல் செயற்பாட்டில் சமூக உணர்வு கொண்ட அனைத்துத் தரப்பினரும் தவறாது பங்கேற்று,

ஒன்றிணைந்து குரல்களை உயர்த்தி உறவுகளின் விடுதலைக்கு அணி திரண்டு வலுச் சேர்ப்போம் என்றார். (ம-7,33)

### உரிய அனுமதிகள் ஏதுமின்றி

# எதேச்சதிகாரமாக கண்டாவளையில் 5G தொலைக் கோபுரம் அமைப்பு

### உடன் அகற்றுமாறு பிரதேச மக்கள் போர்க்கொடி

கண்டாவளை புன்னைநீராவிப் பகுதியில் பிரதேச செயலகம் முதல் கிராம சேவகர் வரை எந்த அனுமதியும் பெறப்படாது எதேச்சதிகாரமாக நிறுவப்பட்டுள்ள 5G தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கு பிரதேச மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் அதனை உடன் அப்புறப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னை நீராவியின் ஏ-9 பிரதான வீதி அருகில் 5G தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த தொலைத்தொடர்பு கோபுரத்தை உடனே அகற்றுமாறு அந்தப் பகுதி மக்கள் ஊடக சந்திப்பொன்றை நிகழ்த்தி மேற்குறித்த கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட பிரதேச மக்கள் மேலுும தெரிவிக்கையில்,

இப்பகுதியில் எமக்கு 5G தொலைத்தொடர்பு கோபுரம் தேவையில்லை. அதனை இங்கிருந்து உடனடியாக அகற்ற வேண்டும். இந்தத் தொலைத்தொடர்பு எமக்கும் எமது உறவுகளுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எமது சந்ததியையே அழித்து விடும்.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தின் எந்த வித அனுமதியும் பெறவில்லை.

அத்துடன் கிராம சேவையாளரின் அனுமதியும் பெறவில்லை. பிரதேச சபையின் அனுமதியும் பெறப்படவில்லை. அத்துடன் குறித்த தொலைத்தொடர்பு கோபுரம் யாரால் நிறுவப்பட்டது என்றும் யார் அனுமதித்தது என்றும் எமக்குத் தெரியாது.

எனவே உடனடியாக தொலைத்தொடர்பு கோபுரத்தை அகற்ற வேண்டும் என்று உரிய அதிகாரிகளிடம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றனர். (ம-7)

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் குருநாகலில் ஒருவர் கைது

(குருநாகல்)

குருநாகலில் பல்லேமொருகமப் பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் அலவ்வ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்லேமொருகமப் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே கைதாகியுள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அலவ்வப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# தங்கம்மா அப்பாகுட்டியின் 17ம் ஆண்டு குருபூஜை தினம்


தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான முன்னாள் பெருந்தலைவி தமிழ்ச்செல்வி துர்க்கா துரந்தரி பண்டிதை அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பதினேழாவது ஆண்டு குருபூசை வைபவமானது ஆனிமாத விசாக நன்னாளான இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணியளவில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம் பெறும். தன் பைந்தமிழால் தமிழ் வளர்த்த அன்னையின் குருபூசை நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீகத் துறை பேராசிரியர் முருகதாஸ் தணிகைச்செல்வன் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் மருத்துவர் பேரானந்தராஜா டினேஷன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆலயவழிபாடு அன்னையின் நினைவாலய வழிபாடு என்பனவற்றுடன் ஆரம்பமாகும் இவ் வைபவந்தனில் முக்கிய அங்கமாக மூத்த சிவாச்சாரியார்களை கௌரவிக்கும் நன்நிகழ்வும் இடம்பெறவுள்ளதுடன் நிறைவாக மகேஸ்வரப் பூஜையும் நடைபெறவுள்ளது. (ம7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை

## அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

## சித்திரத்தேர் வெள்ளோட்டம் -07.07.2025



நிகழும் மங்கள விசுவாவசு வருடம் ஆனி 23ஆம் நாள் 07.07.2025 அன்று சுபநேரம் காலை 09.30 மணிக்கு வெள்ளோட்ட நிகழ்வு நடைபெற ஸ்ரீ கண்ணகி அம்மன் அருள்பாலித்துள்ளார். அலைகடல் அருகே வீற்றிருந்து எம்மை ஆட்கொண்டு அருள்புரியும் ஸ்ரீ கண்ணகா தேவித்தாய் கடந்த முப்பத்தி ஐந்து ஆண்டு காலமும் எமக்காக எமது ஊரை காத்தருளிய ஆயிரம் கண்ணுடைய தாய். அத்தாயை தரிசிக்க தவமிருந்த எமக்காக ஆனந்தமாக தேரேறிவர இருக்கிறார். எமது தாய் வருவதற்காக சித்திரத்தேரை உங்களது ஆதரவோடு கட்டி முடித்து வெள்ளோட்ட நிகழ்வை உங்கள் உறுதுணையுடன் நடத்த தீர்மானித்துள்ளோம். இவ்வரலாற்று சிறப்புமிக்க வெள்ளோட்ட விழாவுக்குப் பக்த அடியார்கள் அனைவரையும் அலை அலையென திரண்டு வந்து அம்பாளின் தேர்வடம் பிடித்து பூரண ஆசியை பெற்றுக் கொள்ள வேண்டுகின்றோம்.

**அனைவரும் வருக... கண்ணகை அம்மன் அருள் பெருக...**



### ஆசிச் செய்தி



எண்ணூறு வருட பழமையும் சிறப்பும் மிக்க கேட்டது எல்லாம் அருளும் மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை மக்களின் குல தெய்வமாம், புன்னை மரநிழலமர்ந்து அருளாட்சி நல்கும் பத்தினித் தாயவள் கண்ணகை அம்பாளின் ஊர் மக்கள் கடந்த 35 வருட காலமாக புலம் பெயர்ந்து தற்போது மீள்குடியமர்ந்து மீண்டும் புதிய சித்திரத் தேர் அமைத்து தனது அடியவர்களின் கரங்களால் வடம்பிடித்து வெள்ளோட்டம் காண உள்ள இவ் வேளையில் கண்ணகை அம்பாள் அடியவர்கள் அனைவருக்கும் சித்திரத் தேர் அமைக்க உதவிய அனைவருக்கும் அம்பாளின் பூரண அருட்கடாட்சம் கிடைக்க எல்லாம் வல்ல கண்ணகை அம்பாளை பிரார்த்தித்து எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆலய உற்சவகுரு சக்தி உபாசகர் க. சுதாகரக்குருக்கள்**
**வீமன்காமம்.**

## நெறிப்படுத்தியவர்கள்- தேர்த்திருப்பணிச்சபையினர்

**சிற்பாச்சாரியார்- சிற்பகலாவித்தகர் திரு. தம்பிப்பிள்ளை விக்கினேஸ்வரன்**
**வர்ண வாருதி விஜேந்திரா ஐங்கரன் காயத்ரி கவின் கலைக்கூடம்**

(4728)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணாவிலில்...

கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## இந்த ஆண்டு...

மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் 3,517 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை உள்ளது. அரசாங்கத்தின் சுற்றுநிருபம் மூலம் பட்டதாரி ஆசிரியர்களை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றுநிருபத்தில் பல பிழைகள் உள்ளது. அதில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. அதனால் பட்டதாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அந்தச் சுற்றுநிருபம் நிறுத்தப்பட்டுளது. புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய சுற்றுநிருபத்தில் 1,756 ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். பற்றாக் குறையில் 50 வீதம் உள்வாங்கப்படவுள்ளார்கள்.

இதன்மூலம் கணிசமான ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும். ஆனாலும் அதில் ஒரு தடையுள்ளது. ஏற்கெனவே வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்கையும் விரைவாக முடித்து இந்த வருடத்திற்குள் ஆசிரிய நியமனத்தை வழங்க எண்ணியுள்ளோம்.

பொதுவான வெட்டுப்புள்ளியை நிறுத்தி மாவட்டத்திற்கு தனித் தனியான வெட்டுப்புள்ளிகளை வழங்கி மாவட்டத்திற்குத் தேவையான ஆசிரியர்களை உள்வாங்குவதன்மூலம் இடமாற்றப் பிரச்சினையையும் தீர்க்க முடியும். இது தொடர்பில் ஆளுநருடன் பேசியுள்ளோம் என்றார். (ம-7,250)

## சாதுரியமாக...

இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த அரச பேருந்து சாவகச்சேரியை அண்மித்தபோது சாரதிக்கு திடீரென தலைச்சுற்று ஏற்பட்டு உடல் முழுவதும் வியர்வை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. பேருந்தின் ஓட்டமும் தடுமாறியுள்ளது.

உடனடியாகப் பயணிகளும் சாரதியைக் கவனத்திற்குக் கொண்டுவர, சாரதி உடனடியாகச் சுதாகரித்துக் கொண்டு பேருந்தை அவ்விடத்திலேயே நிறுத்திக் கொண்டு ஓட்டுநர் ஆசனத்தில் சரிந்து கொண்டார்.

இதனால் இடம்பெறவிருந்த பேராபத்து சாரதி மற்றும் பயணிகளின் சாதுரியம் காரணமாகத் தவிர்க்கப்பட்டது.

இதனையடுத்துப் பயணிகள் வேறு பேருந்தில் பயணமாகி யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்துள்ளனர். சாரதி மருத்துவ சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

## செம்மணிப்...

முன்பாக, நேற்றுக் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை யாழ்ப்பாணம் பகுதியிலுள்ள செம்மணிப் பகுதியில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட அநீதிக்கு ஐ.நா மனித உரிமை ஆணையகம் உரிய விசாரணையை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திக் குறித்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய அரசாங்கம் வழக்கம் போல மௌனம் காக்காமல் பன்னாட்டு விசாரணையை நடத்தக் குரல் கொடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோரிக்கை விடுத்தனர். (ம-7)

## பயங்கரவாதத்...

வெளியிடுவதே அரசின் இலக்காக உள்ளது என்றார்.

மேலும் இலங்கைக்குச் சர்வதேச தலையீடு அவசியம் இல்லை எனவும், இலங்கையின் அரசமைப்பு, சட்டம் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பு ஊடாகவே நடவடிக்கைகள் இடம் பெறும் என்றார்.

"ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் செப்ரெம்பரில் நடைபெறவுள்ளது. எனவே மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்தது நல்லது.

அவருக்கும் அறிக்கை முன்வைப்பதற்கு அது இலகுவானதாக இருக்கும். ஏனெனில் அவரால் விடயங்களை நேரில் அவதானிக்க முடிந்தது. நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டியுள்ளோம்.

பொருளாதாரப் பாகுபாட்டை நிவர்த்தி செய்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு காண முடிந்தது. நாம் எதையும் ஒளிக்கவில்லை. வெளிப்படைத்தன்மையுடன்தான் நடவடிக்கை இடம்பெறும் என்றார். (ம-7)

## ஆயுதத்தை...

நிரைஞ்சன் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் செம்மணி புதைகுழி அகழ்வின் போது ஆயுதத்தை ஒத்த பொருள் ஒன்று இனங்காணப்பட்டது.

பொலிஸார் வரவழைக்கப்பட்டு குண்டு செயலிழக்கும் பிரிவினரால் குறித்த பொருள் மீட்கப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

ஆய்வின் பின்னரே இது என்ன பொருள் என்று அடையாளப்படுத்தப்படும் என்றார். (ம-7)

## மேலும்...

கையில்,

செம்மணி சித்துப்பாத்தி மனித புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்டத்தின் 10ஆம் நாள் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இதுவரை மொத்தமாக 45 மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 42 மனித எலும்புக் கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை புதிதாக நேற்று மூன்று எலும்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது என்றார். (ம-7,33,104)

## புதிய...

செம்மணி மனிதப் புதைகுழியின் 2ஆம் கட்ட அகழ்வின் 10ஆம் நாள் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதிகளில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகின. இந்நிலையில் நேற்று முன்தினம் அகழ்வின்போது அந்தப் பகுதியில் சிறுமியின் ஆடை ஒன்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தது. நேற்றைய அகழ்வில் மண்டையோடு ஒன்று அடையாளம் காணப்பட்டது. அதனை அகழ்ந்து எடுப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-7,33,104)


மஹஜன சம்பத
திகதி 2025.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 5881
V 0 8 1 8 3 4
அத சம்பத V 1 8 3 4
சீட்டிழுப்பு இலக்கம் 0456

தன நிதானய
திகதி - 2025.07.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1911
Q 46 48 64 75 Q
83618

மெகா பவர்
திகதி 05/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2229
A 26 05 32 62 68

ஜய
திகதி 2025.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 0149
J 4 3 9 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4123
சீட்டிழுப்பு திகதி 05.07.2025
T 19 50 53 80
T

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 1190
சிம்மம் 02 03 08 12 சிம்மம்
47074 36

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.07.2025 வெற்றி வாரம் 589
S 9 3 2 4 0 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22.658.992.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2855
சீட்டிழுப்பு திகதி 2025.07.05 தினம் சனிக்கிழமை
09 27 72 73 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,150,533.60

சனிதா
திகதி 05.07.2025 வெற்றி வாரம் 5016
31 72 79 80 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,632,361.60

சசிரி
வெற்றி வாரம் 719
சீட்டிழுப்பு திகதி 05.07.2025 சனிக்கிழமை
24 26 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4567
சீட்டிழுப்பு திகதி 05.07.2025 தினம் சனிக்கிழமை
13 21 33 51 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,558,502.80

கப்ருகா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 37 07 20 39 40
2031 05.07.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.581,047,214.80

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் 2681
சீட்டிழுப்பு திகதி 2025.07.05
13 38 48 74 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69.240.967.20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமி திருவாசக அரண்மனை - நாவற்குழி
### கும்பாபிஷேக தினம்



07.07.2025 காலை 9.00 மணிக்கு ஆரம்பம்
விசேட சங்காபிஷேகம்
12.00 மணி அன்னதானம்
அனைத்து அடியவர்களும் வருகைதந்து
சிவனருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம். (4702)

A9 வீதி,
நாவற்குழி.

நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை


## விசேட சோதனை நடவடிக்கை 300 இற்கும் மேற்பட்டோர் கைது

(கொழும்பு)

கந்தானை, ஜா-எல, வத்தளை மற்றும் ராகம பகுதிகளில் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட 300 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம்(04) இரவு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட இந்த விசேட சோதனை நடவடிக்கையை பொலிஸ், விசேட அதிரடிப்படை, இராணுவம் மற்றும் கடற்படை ஆகியன இணைந்து மேற்கொண்டிருந்தன.

நாட்டிலிருந்து போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் செயல்முறையின் மற்றுமொரு அத்தியாயமாக இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## தவறிவிட்டது

30.06.2025 அன்று கொழும்பில் இருந்து வவுனியா வந்த இலங்கை போக்குவரத்து பேருந்தில் (CTB) அநுராதபுரத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் (883542711V) தே.அ.அ. சாரதி அட்டை தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். பண நன்கொடை வழங்கப்படும். (1289)

077 082 2237 யாழ்ப்பாணம்

## UBER சேவை யாழில்

நீங்கள் உங்கள் வாகனங்களை எம்முடன் இணைத்து மாதம் 200,000/- வருமானம் பெறலாம். விபரங்களுக்கு அழைக்கவும். (198)

076 897 2043
070 612 3125

## மீசாலை கிழக்கில் காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :
0776 544 540
(தரகர் தேவையில்லை) (197)

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு Graphic designer, Type setting செய்வதற்கு வேலையாள் தேவை. யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (1292)
தொடர்புகளுக்கு :
076 192 3444
077 482 1912

## வீடு வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி சந்திக்கு அருகில் புதிய வீட்டின் 1ம் மாடி Ac+ அனைத்து தளபாட வசதிகளுடன் வாடகைக்கு உள்ளது. உத்தியோகத்தில் உள்ள சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம். (1297)

077 974 1382

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்க்காணும் ஆட்கள் தேவை.

1. Manager (2 Years experience)
2. Administration
3. Computer Billing + Cashier
4. Sales Assistant
5. Driver - AD Licence
6. Packing - பொதியிடல்
7. part time - 5.00 pm to 10.00pm

- வயது எல்லை 18 - 35
- யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :
077 419 5209
077 419 5218 (4721)

## காணி விற்பனைக்கு

01. வடலியடைப்பு, சித்தங்கேணி -பண்டத்தரிப்பு பிரதான வீதியோரத்தில் உள்ள 6 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
02. தாவளை, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டையில் 6 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குள்ளது.
03. குளிப்பன் வீதி, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டையில் 4 பரப்புக்காணி சுற்றுமதில் வீட்டுடன் விற்பனைக்குள்ளது.
04. நவாலி வீதி, சங்கரத்தைச்சந்தி, வட்டுக்கோட்டையில் 5.5 பரப்புக்காணி கடையுடன் விற்பனைக்குள்ளது.

077 372 6685
077 988 5452 (4698)

## பகுதிநேர/ முழுநேர வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள பலசரக்குக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (1299)

077 590 9501
077 831 2284

## அறை வாடகைக்குண்டு

இல.24 பலாலி வீதி 2ம் ஒழுங்கையில் உள்ள வீட்டில், பணிபுரியவர்கள் இருவர் தங்கக்கூடியஅறை வாடகைக்கு உண்டு. (4707)

077 996 8835

## பணியாளர் வெற்றிடம்

கணக்காளர் - ஆண்கள், பெண்கள்
- HNDA/ AAT கணினி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்கள்
- கணினி அறிவு/ முன் அனுபவம் விஷேட தகைமையாக கொள்ளப்படும்
- முன் அனுபவம் உடையவர்களுக்கு விஷேட கொடுப்பனவு வழங்கப்படும்

✓ EPF/ ETF கொடுப்பனவு வழங்கப்படும் ✓ நிரந்தர தொழில்
சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்
ESS JEY ELECTRICALS, No.09, STANLEY ROAD, JAFFNA.
021 222 2564 / 021 222 7430 (4700)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## கிரவல் தேவை

1.யூனியன்குளம்(அக்கராயன்) பகுதிக்கு 30 டிப்பர் லோட் தேவை.
2.பழைய இரும்புக்கேற் தேவை. (4727)

076 423 7053
077 736 1215

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டப் பகுதியில் 2 பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட 6 அறை வசதிகளுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும்: (1296)

076 088 7957
076 009 8661


## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 250/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 389/= |
| 1Kg றவை | - 290/= |
| 1Kg சர்க்கரை | - 265/= |
| 1Kg ஈக்குத்தீட்டல் பச்சை | - 215/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 240/= |
| 10Kg விஜிதா | - 2800/= |
| 1Kg மல்லி (M) | - 355/= |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 762/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 890/= |
| 1Kg கடலை | - 385/= |
| 1Kg சோயா | - 350/= |
| 400g விம் கட்டி | - 250/= 265/= |

Max 01
1060/= 400g Anchor 1100/=



280/= 1Kg Sunlight 326/=



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (1300)
Happy Supermarket
0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org